SAKTHI MARKETING
வாடிக்கையாளர்களின் நன் மதிப்பை பெற்ற நிறுவனம்
பெட்ரோல், டீசல், சர்வோ ஆயில் சில்லரை விற்பனை நிலையம்
IndianOil
#41/B, Sabanayagar Street, Chidambaram-1.
Ph: 04144-223177, Cell: 98423 35007


# மாலை எக்ஸ்பிரஸ்

குரோதி வருடம் பங்குனி 1 | MAALAI EXPRESS | ஹிஜிரி 1446 ரமலான் 14

மாநிலம் பயனுற!

Email: maalaiexpresspdy@gmail.com
Website: www.maalaiexpress.com
/maalaiexpressnews

● புதுச்சேரி ● சனிக்கிழமை, மார்ச் 15, 2025 ● வெளியூர்: 16-3-2025, ஞாயிற்றுக்கிழமை RNI.REG.NO.PONBIL/2015/68788 ● Volume - 10 ● Issue - 239 ● 8 பக்கம் ● ரூ.6


மல்டிகலர் பைகள்

துணிக்கடை, நகைக்கடை, திருமண மற்றும் சுபவிசேஷங்களுக்கு அனைத்து விதமான மாடல்களிலும் சிறந்த முறையில் பைகள் தைத்துதரப்படும்.
தொடர்புக்கு:- 98423 35007

## 2025-26ம் நிதியாண்டில்

# வேளாண் துறைக்கு ரூ.45,661 கோடி நிதி ஒதுக்கீடு



பட்ஜெட்டில் அறிவிப்பு

**சென்னை, மார்ச் 15-**

2025–26ம் ஆண்டுக்கான வேளாண்மை பட்ஜெட்டை சட்டசபையில் வேளாண் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தாக்கல் செய்தார். பட்ஜெட் உரையில் கூறி இருப்பதாவது: இயற்கை மேலாண்மை பணிகளுக்காக ரூ.2000 கோடி ஒதுக்கீடு. உழவர்களுக்காக இலவச மின் இணைப்புகளுக்கான கட்டணத் தொகையாக ரூ.8,186 கோடி ஒதுக்கீடு. வேளாண் துறைக்கு இந்த ஆண்டு ரூ.45,661 கோடி ஒதுக்கீடு. பயிர் கடன் தள்ளுபடி திட்டத்தின் கீழ் தற்போது வரை ரூ.10,346 கோடி தொகையும், வட்டித் தொகையும் தமிழ்நாடு அரசால் விடுவிக்கப்பட்டுள்ளன. நெல் கொள்முதல் மூலம் ரூ. 297 கோடி நேரடியாக விவசாயிகள் வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் வேளாண் பட்ஜெட்டை சுமார் 1 மணி நேரம் 41 நிமிடங்களில் தாக்கல் செய்தார்.

## 24, 25ந் தேதிகளில் வங்கிகள் ஸ்டிரைக் வங்கி சங்கங்கள் கூட்டமைப்பு அறிவிப்பு

**கொல்கத்தா, மார்ச் 15-**

பொதுத்துறை வங்கிகளில் ஊழியர்கள், அதிகாரிகள், இயக்குனர்கள் உள்பட அனைத்து பணியிடங்களையும் நிரப்ப வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, நாடு முழுவதும் 24 மற்றும் 25ந் தேதிகளில் வங்கி ஊழியர் சங்கங்கள் வேலைநிறுத்தம் அறிவித்து இருந்தன.

9 வங்கி ஊழியர் சங்கங்களின் உயரிய அமைப்பான வங்கி சங்கங்கள் ஐக்கிய கூட்டமைப்பு இதற்கு அழைப்பு விடுத்திருந்தது. இதையடுத்து, இந்திய வங்கிகள் சங்கம், ஐக்கிய கூட்டமைப்பை பேச்சுவார்த்தைக்கு அழைத்தது.

பேச்சுவார்த்தையின்போது, வாரத்தில் 5 நாள் வேலையை அமல்படுத்த வேண்டும், பணித்திறனை ஆய்வு செய்தல் மற்றும் பணித்திறன் அடிப்படையில் ஊக்கத்தொகை ஆகிய உத்தரவுகளை திரும்பப்பெற வேண்டும், பணிக்கொடை உச்சவரம்பை ரூ.25 லட்சமாக உயர்த்த வேண்டும், அதற்கு வருமானவரி விலக்கு அளிக்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளையும் ஐக்கிய கூட்டமைப்பு முன்வைத்தது. ஆனால், இந்த பேச்சுவார்த்தை தோல்வி அடைந்ததாக வங்கி சங்கங்கள் ஐக்கிய கூட்டமைப்பு கூறியுள்ளது.

முக்கிய கோரிக்கைகள் எவற்றையும் இந்திய வங்கிகள் சங்கம் ஏற்றுக்கொள்ளாததால் பேச்சுவார்த்தை தோல்வி அடைந்ததாக ஐக்கிய கூட்டமைப்பின் பொதுச்செயலாளர் எல்.சந்திரசேகர் தெரிவித்துள்ளார். எனவே, ஏற்கனவே திட்டமிட்டபடி, 24 மற்றும் 25ந் தேதிகளில் நாடுதழுவிய 2 நாள் வங்கி ஊழியர்கள் ஸ்டிரைக் நடைபெறும் என்றும் அவர் கூறியுள்ளார்.

## சுனிதா வில்லியம்ஸ், வில்மோரை அழைத்து வர புறப்பட்டு சென்ற விண்கலம்



**ஹூஸ்டன், மார்ச் 15-**

சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு (ஐ.எஸ்.எஸ்.) கடந்த வருடம் ஜூனில் ஆய்வு பணிக்காக பச் வில்மோர் மற்றும் சுனிதா வில்லயம்ஸ் ஆகிய இருவரும் சென்றனர். ஒரு வார காலம் தங்கி ஆய்வு பணி மேற்கொள்வதற்காக திட்டமிடப்பட்டு இருந்தது.

ஆனால், பூமிக்கு திரும்ப முடியாமல் தொடர்ந்து அவர்கள் சர்வதேச விண்வெளி நிலையத்தில் சிக்கி தவித்தனர். இந்நிலையில், 9 மாதங்களாக தவித்து வந்த அமெரிக்க விண்வெளி வீரர்களை பூமிக்கு அழைத்து வர ஸ்பேஸ்எக்ஸ் மற்றும் நாசா அமைப்பு இணைந்து ராக்கெட் ஒன்றை அனுப்பி உள்ளது.

இதற்காக, டிராகன் விண்கலத்துடன் பால்கன் 9 ரக ராக்கெட் ஒன்று இன்று அதிகாலை புறப்பட்டு சென்றது. இந்த ராக்கெட் இன்றிரவு 11.30 மணியளவில் ஐ.எஸ்.எஸ்.சுக்கு சென்றடைந்ததும், வருகிற 19ந்தேதி வில்மோர் மற்றும் வில்லயம்ஸ் இருவரும் அந்த விண்கலத்தில் புறப்பட்டு பூமிக்கு திரும்புவார்கள்.

அவர்களுடன் நாசா விஞ்ஞானி நிக் ஹேக் மற்றும் ரஷிய அலெக்சாண்டர் விஞ்ஞானி கோர்புனோவ் ஆகியோரும் பூமிக்கு திரும்புவார்கள். கடந்த செப்டம்பரில் அவர்கள் இருவரும், வில்லியம்ஸ் மற்றும் வில்மோர் ஆகிய இருவரையும் திரும்ப அழைத்து வருவதற்காக காலியான 2 இருக்கைகளுடன் குரூ டிராகன் விண்கலத்தில் சென்றனர்.

## ஹோலி கொண்டாட்டத்தில் சோகம் 4 சிறுவர்கள் உள்பட 7 பேர் நீரில் மூழ்கி பலி

**புனே, மார்ச் 15-**

நாடு முழுவதும் ஹோலி பண்டிகை நேற்று சிறப்பாக கொண்டாடப்பட்டது. சிறுவர் சிறுமியரும், பெரியவர்களும் வண்ண பொடிகளை ஒருவர் மீது ஒருவர் தூவியும், வண்ண பொடிகளை நீரில் கரைத்து அவற்றை மற்றவர் மீது ஊற்றியும் உற்சாகத்துடன் கொண்டாடினர். இந்நிலையில், ஹோலி கொண்டாட்டத்தின்போது சில சோக சம்பவங்களும் நடந்துள்ளன. மராட்டியத்தின் புனே மாவட்டத்தில் கின்னாய் கிராமத்தில் இருந்து 5 பேர் நேற்று மாலை இந்திரயாணி ஆற்றில் குளிப்பதற்காக சென்றுள்ளனர். அப்போது, அவர்களில் கவுதம் காம்பிளே, ராஜ்திலீப் அக்மே மற்றும் ஆகாஷ் விட்டல் கோடே ஆகிய 3 பேரும் நீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

இதுபற்றி தகவல் அறிந்து தேசிய பேரிடர் பொறுப்பு படையினர், தீயணைப்பு படையினர் மற்றும் உள்ளூர்வாசிகள் சம்பவ பகுதிக்கு சென்று மீட்பு பணியில் ஈடுபட்டனர். இதில், 3 பேரின் உடல்கள் மீட்கப்பட்டன. இதேபோன்று, தானே மாவட்டத்தில் ஹோலி பண்டிகையை கொண்டாடிய 4 சிறுவர்கள், கை கால்களை கழுவுவதற்காக உல்லாஸ் ஆற்றிற்கு சென்றுள்ளனர். இதில், அடுத்தடுத்து 4 பேரும் நீரில் மூழ்கி உயிரிழந்தனர். அவர்கள் ஆரியன் மேதர், ஆரியன் சிங், சித்தார்த் சிங் மற்றும் ஓம் சிங் தோமர் என அடையாளம் காணப்பட்டனர். ஒரே நாளில் மராட்டியத்தில் 7 பேர் உயிரிழந்தது அந்த பகுதி மக்களிடையே சோகம் ஏற்படுத்தி உள்ளது.

## 41 நாடுகளை சேர்ந்தவர்கள் அமெரிக்காவுக்கு பயணிக்க தடை?- டிரம்ப் கிடுக்குப்பிடி

**புதுடெல்லி, மார்ச் 15-**

அமெரிக்காவில் டொனால்டு டிரம்ப் நிர்வாகம் சட்டவிரோத குடியேற்றத்தைத் தடுப்பதில் கடுமையாக செயல்பட்டு வருகிறது. இந்நிலையில் பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், துர்க்மெனிஸ்தான், பெலாரஸ், பூட்டான் மற்றும் வனுவாட்டு உள்ளிட்ட 41 நாடுகளை சேர்ந்தவர்கள் அமெரிக்காவிற்கு பயணம் செய்வதற்குத் தடை விதிக்கப்பட வாய்ப்புள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

பல்வேறு குறைபாடுகளை சுட்டிக்காட்டி இந்த தடை விதிக்கப்பட வாய்ப்புள்ளதாக அமெரிக்க அரசு நிர்வாக மட்டத்தில் இருந்து கிடைத்த வரைவு அறிக்கை தகவலின்படி ராய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த நாடுகள் மூன்று குழுக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன, முதல் குழுவில் உள்ள நாட்டினரின் விசாவை முழுமையாக ரத்து செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இரண்டாவது குழு பகுதி கட்டுப்பாடுகள் மற்றும் தடையை எதிர்கொள்கிறது. மூன்றாவது குழுவில் உள்ள நாடுகளுக்கு சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரிசெய்ய 60 நாட்கள் அவகாசம் வழங்கப்படும் என்று தெரிகிறது.

ராய்ட்டர்ஸ்கு கிடைத்த வரைவின்படி முதல் குழுவில், ஆப்கானிஸ்தான், கியூபா, ஈரான், லிபியா, வட கொரியா, சோமாலியா, சூடான், சிரியா, வெனிசுலா மற்றும் ஏமன் ஆகிய 10 நாடுகளின் குடிமக்கள் முழு விசா தடையை எதிர்கொள்ள நேரிடும். இரண்டாவது குழுவில் இடம்பெற்ற எரித்திரியா, ஹைட்டி, லாவோஸ், மியான்மர் மற்றும் தெற்கு சூடான் ஆகிய நாடுகளின் மீது சுற்றுலா, மாணவர் விசாக்கள் புலபெயர்வு விசா வழங்களில் கட்டுப்பாடுகள் விதிக்கப்படும். மூன்றாவது குழுவில் இடம்பெற்ற பாகிஸ்தான் உள்ளிட்டவை தங்கள் குறைபாடுகளை சரி செய்ய 60 நாட்கள் அவகாசம் வழங்கப்படும் என்று தெரிகிறது.

டிரம்ப் 2016–20 பதவிக்காலத்தில், ஏழு பெரும்பான்மை முஸ்லிம் நாடுகளைச் சேர்ந்தவர் களுக்கு பயண தடை விதிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் அதை விட தற்போது விதிக்கப்பட உள்ள கட்டுப்பாடுகள் பெரிய அளவிலிருக்கும் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர் என ராய்ட்டர்ஸ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.


ஸ்ரீ ராம் மார்கெட்டிங்
தங்க நகை விற்க (அ) மறு அடகு வைக்க
இன்றைய மார்க்கெட் விலைக்கு விற்று தரப்படும்
செல்: 87606 61133 , 87606 61199



# கண் நீர் அழுத்த நோய் விழிப்புணர்வு பேரணி




கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அழகுமீனா ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் மாவட்ட பார்வையிழப்பு தடுப்பு சங்கம் சார்பில் கண் நீர் அழுத்த நோய் விழிப்புணர்வு பேரணியினை கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

# மாற்றுத்திறனாளிகளிடம் மனுக்களை பெற்ற ஆட்சியர்



திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் கிறிஸ்துராஜ் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்ற மாற்றுத்திறனாளிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகளிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார்கள்.

# குழந்தைகள் பாதுகாப்பு குழுக் கூட்டம்



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு குழுக் கூட்டம், குழந்தைகள் நலக் குழு, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் மற்றும் சமூக நலத்துறை ஆகியவற்றின் செயல்பாடுகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் இளம்பகவத் தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

## தலையங்கம்

**மாலை எக்ஸ்பிரஸ்**

15.3.2025 (சனிக்கிழமை)

# கடைசி முழு பட்ஜெட்

அடுத்த வருடம் சட்டசபை தேர்தலை சந்திக்க இருக்கும் சூழ்நிலையில் நேற்று தாக்கல் செய்யப்பட்ட பட்ஜெட்தான் தமிழ்நாட்டில் கடைசி முழு பட்ஜெட். எனவே இது கவர்ச்சியான அறிவிப்புகளை கொண்டதாக இருக்கும் என்று எல்லோரும் எதிர்பார்த்தார்கள். ஆனால் இது கவர்ச்சிகரமான அறிவிப்புகள் இல்லாமல், பரவலான வளர்ச்சியை, உள்கட்டமைப்பை மேம்படுத்தும் திட்டங்களைக்கொண்டதாக இருந்தது. பட்ஜெட் உரையை நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு சற்றும் களைப்பில்லாமல் 2 மணி 40 நிமிடங்கள் வாசித்தார். இதில் கடைசி 5 நிமிடத்தில் அனைவரும் பாராட்டும் வகையில் தமிழகத்திற்கு மடைதிறந்த வெள்ளம்போல நல்லதொரு 4 அறிவிப்புகளை வெளியிட்டார்.

அதன்படி, அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் பலன் அடையும் வகையில், அவர்களது ஈட்டிய விடுப்பை 15 நாட்கள் வரை சரண் செய்து பணப்பலன் பெறலாம், ரூ.10 லட்சம் வரையிலான வீட்டு மனை, விவசாய நிலம் உள்ளிட்ட அனைத்து அசையா சொத்துகள் பெண்கள் பெயரில் பதிவு செய்யப்பட்டால் பதிவு கட்டணம் ஒரு சதவீதம் குறைக்கப்படும். அடுத்து வரும் 5 ஆண்டுகளில் ஒரு லட்சம் மகளிரை தொழில் முனைவோராக உயர்த்தும் பெருந்திட்டம். அடுத்த 2 ஆண்டுகளில் 20 லட்சம் கல்லூரி மாணவர்களுக்கு அவரவர் விருப்பத்தின் அடிப்படையில் கைக்கணினி அல்லது மடிக்கணினி வழங்கப்படும் என்று அறிவித்தார்.

இதுதவிர தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பகுதிகளுக்கும் பலனளிக்கும் பல வளர்ச்சித்திட்டங்கள் இந்த பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளன. தூத்துக்குடியில் கப்பல் கட்டும் தளம், அரசு பள்ளிக்கூடங்களில் உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்க ரூ.1,000 கோடி, சென்னைக்கு அருகே ஒரு புதிய நகரம் மற்றும் ஒரு புதிய நீர்த்தேக்கம், ராமேசுவரத்தில் புதிய விமான நிலையம், ஓசூரில் தகவல்தொழில்நுட்ப பூங்கா, விருதுநகரில் புதிய மினி டைடல் பூங்கா, கோவையில் செமி கண்டக்டர் தொழில் பூங்கா, கலைஞர் வீடு கட்டும் திட்டத்தின்கீழ் கிராமப்புறங்களில் ஒரு லட்சம் கான்கிரீட் வீடுகள் கட்ட நிதியுதவி, 10 புதிய அரசுக்கல்லூரிகள், சென்னை மெட்ரோ ரெயில் விரிவாக்கத்திட்டங்கள், இந்த ஆண்டு 40 ஆயிரம் அரசுப் பணியிடங்கள் நிரப்பப்படும் போன்றவை முத்தான அறிவிப்புகளாக இருந்தன.

மேலும் பெற்றோரை இழந்த 50 ஆயிரம் குடும்பங்களைச்சேர்ந்த பிள்ளைகள் கல்வியை தொடர 18 வயது வரை மாதம் ரூ.2 ஆயிரம் உதவித்தொகை உள்பட பல சமூகநல கட்டமைப்பு சார்ந்த திட்டங்கள் பட்ஜெட்டில் இடம்பெற்றுள்ளன. இந்த ஆண்டில் ரூ.1 லட்சத்து 62 ஆயிரத்து 96 கோடி அளவுக்கு மொத்தக்கடன் பெற திட்டமிடப்பட்டுள்ள நிலையில், அடுத்த 2026ம் ஆண்டு மார்ச் மாதம் 31ந்தேதியன்று தமிழகத்தின் நிலுவையில் உள்ள மொத்தக்கடன் தொகை ரூ.9 லட்சத்து 29 ஆயிரத்து 959 கோடியாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. மொத்த செலவீனத்தில் வட்டி மட்டும் ரூ.70 ஆயிரத்து 754 கோடி கட்டவேண்டியதிருக்கிறது என்றாலும், தமிழ்நாடு 8 சதவீதத்துக்கு மேல் வளர்ச்சியடைந்துள்ள நிலையில், நிதிக்குழு கடன்வாங்க பரிந்துரைத்துள்ள வரைமுறைக்குட்பட்டே இந்த கடன்கள் வாங்கியிருப்பதால் இதை சிறந்த முறையில் நிர்வகிக்கப்பட்ட பட்ஜெட் என்றே சொல்லலாம்.

பெண்களுக்கு மகளிர் உரிமைத்தொகை உயர்த்தப்படும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், அது ஒன்றுதான் நிறைவேறவில்லையென்றாலும் தேர்தலுக்கு முன்பாக அதனை வெளியிட திட்டமிட்டிருக்கிறார்கள் என்ற நம்பிக்கையோடு இந்த பட்ஜெட் பரவலான வளர்ச்சியை மையமாக வைத்து தயாரிக்கப்பட்ட பட்ஜெட் என்ற எண்ணம்தான் மக்களிடையே இருக்கிறது.

# அண்ணாமலைப் பல்கலைக்கழக தாவரவியல் துறையில் பயிற்சிப்பட்டறை



சிதம்பரம், மார்ச் 15-

*சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழக தாவரவியல் துறை சார்பாக தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம், சென்னை நிதியுதவியுடன் ஒருநாள் பயிற்சிப்பட்டறை "காலநிலை மாற்றம் மற்றும் அதனுடன் தொடர்புடைய மாறுபாடுகள்" என்ற தலைப்பில் தாவரவியல் துறையில் நடைபெற்றது. தொடக்க விழாவின்போது பல்கலைக்கழக ஒருங்கிணைப்பு குழு உறுப்பினர் அருட்செல்வி, பேராசிரியர் மற்றும் புலமுதல்வர் நுண்கலைப்பிரிவு துவக்க உரை ஆற்றினார். பல்கலைக்கழக அறிவியல் புல முதல்வர் ஸ்ரீராம் வாழ்த்துரை வழங்கினார். தாவரவியல் துறைத்தலைவர் தமிழினியன் தலைமைஉரை ஆற்றினார். இந்த பயிற்சி பட்டறையின் அமைப்பு செயலாளர் முல்லைநாதன் வரவேற்புரையும், முன்னாள் தாவரவியல் துறைத்தலைவர் ரவீந்திரன் நன்றியுரையும் வழங்கினார்கள். முன்னாள் கடல்வாழ் அறிவியல் புலத்தின் தலைவர்கள் கதிரேசன் மற்றும் அனந்தராமன் இருவரும் காலநிலை மாற்றத்தின் விளைவுகளை எடுத்துரைத்து கலந்துரையாடலும் காலநிலை மாற்றத்தினை விளக்கும் ஓவிய போட்டியினையும் நடத்தினர். பிரகாஷ், பதிவாளர் (பொறுப்பு) நிறைவு விழாவில் கலந்துகொண்டு நிறைவுரை வழங்கினார். ஸ்ரீராம் வாழ்த்துரை வழங்கினார். துறைத்தலைவர் முன்னுரையும், முல்லைநாதன் வரவேற்புரையும், நடராஜன் நன்றியுரையும், தனவேல் மற்றும் குமாரசாமி இவ்விழாவினில் நடந்தவற்றை தொகுத்து வழங்கினர். இந்நிகழ்ச்சியில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் பல்வேறு துறைகளைச் சார்ந்த மாணவர்களும், ஆராய்ச்சி மாணவர்களும், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்படும் உறுப்பு கல்லூரிகளின் மாணவர்களும் சுமார் 200 பேர் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.*

# இலவச மருத்துவ முகாம்



ராமநாதபுரம், மார்ச் 15-

ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் ஊராட்சி ஒன்றியம், சாத்தக் கோண்வலசை பஞ்சாயத்திற்கு உட்பட்ட தில்லை நாச்சியம்மன் குடியிருப்பில் அக்வா அக்ரி மற்றும் ஹெல் பேஜ் இந்தியா நடமாடும் மருத்துவ சேவை சார்பில் இலவச மகளிர் நலன் மற்றும் பொது மருத்துவ முகாம் நடைபெற்றது. ஹெல்ப் ஏஜ் இந்தியா மேலாளர் கார்த்திக் ராஜா அனைவரையும் வரவேற்றார்.

மகப்பேறு மற்றும் மகளிர் நலன் மருத்துவர் நான்சி மற்றும் பொதுமருத்துவர் அழகுவேல் மணி ஆகியோர் கலந்துகொண்டு இலவசமாக மருத்துவ ஆலோசனைகளை வழங்கினார்கள். முகாமில் கலந்துகொண்ட பொதுமக்களுக்கு மகப்பேறு மருத்துவம், மகளிர் மற்றும் பொது நலன், கர்ப்பப்பை குறைபாடுகள் மாதவிடாய் பிரச்சனைகள், ரத்த அழுத்தம் மற்றும் சர்க்கரை நோய் கண்டறிதல் போன்ற சிகிச்சைகள் அளிக்கப்பட்டு ஆலோசனைகள் நடைபெற்றது. மேலும் சிகிச்சை பெற்ற மக்களுக்கு இலவசமாக மருந்து மற்றும் மாத்திரைகள் வழங்கப்பட்டன. அக்வா அக்ரி நிறுவன மேற்பார்வையாளர் முருகேசன், ஹெல்ப் ஏஜ் இந்தியா தர்மேந்திரன், ஆரோக்கியராஜ், விஜயராணி, உமாராணி, விஜயலட்சுமி மேலும் ஊர் நூற்றுக்கு மேற்பட்ட பொதுமக்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

முகாம் முடிவில் ஹெல்ப் ஏஜ் இந்தியா சமூக பாதுகாப்பு அலுவலர் வெங்கடேஷ் நன்றி கூறினார். முகாம் ஏற்பாடுகளை அக்குவா அக்ரி மற்றும் ஹெல் பேஜ் இந்தியா அலுவலர்கள் செய்திருந்தனர்.

### காலாப்பட்டு தொகுதி மாற்றுக் கட்சியினர்

# எதிர்க்கட்சித் தலைவர் சிவா முன்னிலையில் திமுகவில் இணைந்தனர்



புதுச்சேரி, மார்ச் 15-

காலாப்பட்டு தொகுதியைச் சேர்ந்த மாற்றுக் கட்சியினர் எதிர்க்கட்சித் தலைவர் சிவா முன்னிலையில் தங்களை திமுக இணைத்துக் கொண்டனர்.

காலாப்பட்டு தொகுதிக்கு உட்பட்ட பிள்ளைச்சாவடி பிரபாகரன் என்கிற பிரவீன் என்பவர் தலைமையில் லோகேஷ், வெங்கட், கார்த்தி, மகேஷ், பிரகாஷ், ராகுல், கிரன், அசோக், பாலாஜி, சுனில், ஜெகதீஷ், ஹரிகிருஷ்ணன், விநாயக், வெங்கட்ராமன் உள்ளிட்ட 100 இளைஞர்கள் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் சிவா முன்னிலையில் தங்களை திமுகவில் இணைத்துக் கொண்டனர். திமுகவில் இணைந்த இளைஞர்களுக்கு பொன்னாடை அணிவித்து வரவேற்ற எதிர்க்கட்சித் தலைவர் சிவா கழக உறுப்பினர் படிவம் கொடுத்து துவக்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில், மாநில துணை அமைப்பாளர் அனிபால் கென்னடி, எம்.எல்.ஏ., காலாப்பட்டு தொகுதி செயலாளர் சத்தியவேல், தொகுதி துணைச் செயலாளர் நடராஜன், முன்னாள் நெசவாளர் அணி துணை அமைப்பாளர் தங்கராமலிங்கம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மூர்த்தி, பொதுக்குழு உறுப்பினர்கள் கோபால், கார்த்திகேயன், வேலவன், தொகுதி செயலாளர்கள் நடராஜன், சக்திவேல், வடிவேல், தியாகராஜன், துணை அமைப்பாளர் யோகேஷ் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

# சமூக சேவை நிறுவனர் பத்மஸ்ரீ மதலேன் ஹெர்மன்தெப்லிக்கின் முதலாமாண்டு நினைவு அஞ்சலி



புதுச்சேரி, மார்ச் 15-

புதுவை அன்னை தெரேசா" என மக்களால் அழைக்கப்படும் மதாம் தெப்லிக் 1962 ஆண்டு முதல் புதுவையில் தங்கி சமுதாயத்தில் ஒடுக்கப்பட்ட தொழுநோயாளிகள், உடல் ஊனமுற்றோர், வறுமையில் வாடிய குழந்தைகள், பெண்கள், முதியோர் போன்ற அனைத்து தரப்பினரின் முன்னேற்றத்திற்காகவும், தம் வாழ்வின் இறுதி மூச்சுவரை அயராது அரும்பாடுபட்டு தமது 90வது வயதில் கடந்த ஆண்டு இதே நாளில் இயற்கை எய்தினார். புதுவை மக்களுக்காக அவர் ஆற்றிய 62 ஆண்டுகால சேவைகளை பாராட்டி அவருக்கு பல விருதுகள் பல விருதுகள் வழங்கப்பட்டன. அவற்றுள் ஒலாந்தரியா'நிறுவனத்திற்கு புதுவை அரசின் சிறந்த சமூக சேவை நிறுவனத்திற்கான விருதும், மதாம் தெப்லிக் அவர்களுக்கு' வாழ்நாள் சாதனையாளர் விருது,இந்திய அரசின் 'பத்மஸ்ரீ விருது' பிரான்ஸ் அரசின் 'செவாலியர் விருது,பெல்ஜியம் நாட்டின்" உயரியஅரசு விருது "முக்கியமானவைகள் ஆகும்.

மதாம் தெப்லிக் நினைவு நாள் உப்பளத்தில் உள்ள ஒலந்தரியா மையத்தில் உதவி பெறும் குழந்தைகள், மாணவ மாணவிகள், பெற்றோர்கள், முதியோர்கள் மற்றும் அனைத்து பணியாளர்கள் சார்பாக அனுசரிக்கப்பட்டது.

மதாமிற்கு மரியாதை செலுத்தும் விதமாக 90 நபர்கள் இரத்த தானம் வழங்கினர். புதுவைக்கான பிரெஞ்சு கவுன்சில் ஜெனரல் மதாம்தெப்லிக் நினைவு சின்னத்தினை திறந்து வைத்து நினைவு மலரையும் வெளியிட்டார். நிகழ்ச்சியில் ஒலாந்தரியா நிறுவனத்தின் இயக்குனர் செந்தில் குமரன், துணை இயக்குனர் சாந்தி, மதாம் தெப்லிக்கின் கணவர் அர்னாட் தெப்லிக், அவரது மகன்கள் மற்றும் ஒலாந்தரிய பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

# மாதாந்திர ஆய்வுக்கூட்டம்



திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் தர்ப்பகராஜ் தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை சார்பாக சார்நிலை அலுவலர்களின் பணி முன்னேற்றம் குறித்து மாதாந்திர ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

# வங்கி அலுவலர்கள் மாதாந்திர ஆய்வுக்கூட்டம்




வேலூர் மாவட்டத்தில் வங்கி அலுவலர்களுடனான மாதாந்திர ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் சுப்புலெட்சுமி தலைமையில் ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்றது.

# வன்கொடுமை சட்டம் தொடர்பான விழிப்புணர்வு கூட்டம்



புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகக் கூட்டரங்கில், மாவட்ட அளவிலான வன்கொடுமை சட்டம் தொடர்பான விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்பு குழுக் கூட்டம், மாவட்ட ஆட்சித்தலைவர் அருணா தலைமையில் நடைபெற்றது. உடன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அபிஷேக் குப்தா.

# மாற்றுத்திறனாளி நலத்துறை சார்பில் வழிகாட்டுதல்கள் மற்றும் தரநிலை குறித்து பயிற்சி



திருவண்ணாமலை, மார்ச் 15-

மாற்றுத்திறனாளி நலத்துறை சார்பாக தமிழ்நாடு உரிமைகள் திட்டத்தின் கீழ் அனைத்து துறைச்சார்ந்த அலுவலர்களுக்கான அணுகல் தன்மை 2021ன் இணக்கமான வழிகாட்டுதல்கள் மற்றும் தரநிலை குறித்து ஒரு நாள் பயிற்சி நடந்தது.

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் தர்ப்பகராஜ் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பாக தமிழ்நாடு உரிமைகள் திட்டத்தின் கீழ் அனைத்து துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் பொறியாளர்களுக்கும் உலகளாவிய அணுகல் தன்மை 2021க்கான இணக்கமான வழிகாட்டுதல்கள் மற்றும் தரநிலை குறித்த ஒருநாள் அணுகல் தன்மை உணர்திறன் பயிற்சியினை துவக்கி வைத்தார்கள்.

இப்பயிற்சியில் திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள அனைத்து துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் பொறியாளர்களுக்கும் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மூலம் ஒரு நாள் பயிற்சி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டு இப்பயிற்சில் கலந்துக்கொண்ட அனைத்து துறை பொறியாளர்களுக்கு உலகளாவிய அணுகல் தன்மைக்கான இணக்கமான வழிகாட்டுதல் மற்றும் தரநிலைகள் குறித்த பயிற்சி அளிக்கப்பட்டது. இதில் கட்டடிடத்தின் அமைப்பை பொருத்து மாற்றுத்திறனாளிகள் மற்றும் அனைத்து மக்களும் எளிதில் அணுகக்கூடிய வகையில் சாய்வுதளம், கைப்பிடித்தடுப்பு. தொட்டுணரக்கூடிய பாதை, பிரெய்லி வரைப்படம், பிரெய்லி அறிவிப்பு பலகைகள், உலகளாவிய வடிவமைப்பு பற்றிய தகவல்களை பயிற்சியில் கலந்துக்கொண்ட அலுவலர்கள் மற்றும் பொறியாளர்களுக்கு Aclude Engineering and Infrastructure development PVT LTD Thoothukkudi பொறியாளர் அவர்களால் அளிக்கப்பட்டது.

இப்பயிற்சியில் திருவண்ணாமலை வருவாய் கோட்டாட்சியர் (பொ) செந்தில்குமார், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் செந்தில்குமாரி, இளநிலை மறுவாழ்வு அலுவலர், உரிமைகள் திட்ட மாவட்ட திட்ட அலுவலர், தொண்டு நிறுவன நிர்வாகிகள் மற்றும் அரசு துறைச்சார்ந்த அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

# பெண்களுக்கான ஹேக்கத்தான் போட்டி




சேலம், மார்ச் 15–

சோனா தொழில்நுட்பக் கல்லூரியும், தமிழ்நாடு மேம்பட்ட உற்பத்தி மையமும், டேன்கேம் இணைந்து இரண்டாவது முறையாக தமிழ்நாட்டில் பொறியியல் துறையில் பெண்களுக்கான மிகப்பெரிய ஹேக்கத்தான் போட்டிகள் நடத்தின.

பெண் மாணவிகள் மற்றும் தொழில் வல்லுநர்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தவும், சிக்கலைத் தீர்ப்பதில் தொழில்நுட்பத்தின் ஆற்றலைப் பயன்படுத்தவும் ஒரு தளத்தை உருவாக்கி, படைப்பாற்றல், ஒத்துழைப்பு மற்றும் திறன் மேம்பாட்டிற்கான ஊக்கியாகச் செயல்பட, டேன்கேம் இன்ஜினியரிங் பெண்களுக்கான ஹேக்கத்தான் போட்டிகள் வடிவமைத்துள்ளது. மேலும் மாறுபட்ட பொறியியல் சமூகத்தை வளர்ப்பதில் உறுதி பூண்டுள்ளது. அங்கு பெண்கள் செழித்து, வடிவமைப்பு மற்றும் கண்டுபிடிப்புகளின் முன்னேற்றத்திற்கு அர்த்தமுள்ள பங்களிப்பை வழங்க உள்ளது. இதற்காக தமிழ்நாட்டில் பொறியியல் துறையில் பெண்களுக்கான மிகப்பெரிய ஹேக்கத்தான் போட்டிகள் சோனா கல்லூயில் நடைபெற்றன.

முன்னதாக சோனா கல்விக் குழுமத்தின் துணைத்தலைவர் தியாகு வள்ளியப்பா தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் சோனா கல்லூரியின் முதல்வர் எஸ். ஆர். ஆர்.செந்தில்குமார் முன்னிலை வகித்தார். விழாவில் சிறப்புவிருந்தினர்களாக டசால்ட் சிஸ்டம்ஸ், கேட்டியா பிராண்ட் நிறுவனத்தின் உலகளாவிய துணைத் தலைவர் பெசன் ஃபிரடெரிக், டேங்கேம் இன் பெருநிறுவன மற்றும் தொழில்துறை துணைத் தலைவர் தென்றல் ராஜேந்திரன், டேங்கேம்இன் தலைமை இயக்க அதிகாரி விஜயதீபன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

இதனைத் தொடர்ந்து திறன்மிகு நகர்ப்புற வளர்ச்சி எனும் தலைப்பின் கீழ் திறன்மிகு மொபிலிட்டி – குறைக்கப்பட்ட நெரிசல், பசுமை உள்கட்டமைப்பு – காலநிலை மீள்தன்மை நாளைய உள்கட்டமைப்பு உள்ளடக்கிய வீட்டுவசதி – சமூக மேம்பாடு, நிலையான எரிசக்தி மற்றும் ஸ்மார்ட் கிரிட்கள் தரவு சார்ந்த நகர்ப்புற திட்டமிடல் பசுமையான எதிர்காலத்திற்கான சுற்றுச்சூழலுக்கு உகந்த வீட்டு உபகரணங்கள், நிலையான வண்ணப் பூச்சுகள், குளிரூட்டும் அமைப்புகள் மற்றும் நகர்ப்புற வாழ்க்கைக்கான தீர்வுகள், ஸ்மார்ட் கழிவு மேலாண்மை, வட்ட பொருளாதாரம் என்ற தலைப்புகளில் போட்டிகள் நடைபெற்றன. இந்த போட்டிகளில் பல்வேறு கல்லூரிகளில் இருந்து சுமார் 1000த்திற்கும் மேற்பட்ட மாணவிகள் பங்கேற்றனர்.

இறுதியாக போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவிகளுக்கு முதல் பரிசாக ரூ.1லட்சம் இரண்டாம் பரிசாக ரூ.50 ஆயிராம். மூன்றாம் பரிசாக ரூ.30 ஆயிரம், மேலும் முதல் 7 அணிகளுக்கு சிறப்பு பரிசாக ரூ10 ஆயிரம் ரூபாய்கான காசோலை மற்றும் சான்றிதழ்களை கல்லூரியின் துணைத்தலைவர் தியாகு வள்ளியப்பா, முதல்வர் எஸ். ஆர். ஆர்.செந்தில்குமார் மற்றும் சிறப்புவிருந்தினர்கள் ஆகியோர் வழங்கி அவர்களுக்கு தங்களது பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்தனர்.

இந்த விழாவிற்கான ஏற்பாடுகளை சோனா கல்லூரியின் மெக்கானிக்கல் துறைத்தலைவர் செந்தில்குமார் உள்ளிட்ட பேராசிரியர்கள் குழு சிறப்பாக செய்திருந்தனர்.

# கருத்துக்களை சிந்தித்து அனைவரது மனதிலும் பதியும் வகையில் பேச வேண்டும்: அமைச்சர் மதிவேந்தன் பேச்சு





நாமக்கல், மார்ச் 15–

நாமக்கல் மாவட்டம், பாச்சல், பாவை கல்வி நிறுவனத்தில் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மதிவேந்தன் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் உமா தலைமையில், பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் ராஜேஸ்குமார், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெராமலிங்கம் ஆகியோர் முன்னிலையில் தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் சார்பில் நாமக்கல் மாவட்டத்தில் உள்ள 30க்கும் மேற்பட்ட அரசு மற்றும் தனியார் கல்லூரிகளை சேர்ந்த 480க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்ட பேச்சு போட்டியை தொடங்கி வைத்தார்.

இம்முகாமில் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மதிவேந்தன் தெரிவித்ததாவது, தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவின்படி, தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் சார்பில் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கான பேச்சுப்போட்டி இன்றைய தினம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இப்பேச்சுப்போட்டிகளில் வெற்றி பெறும் மாணவ, மாணவியர்களுக்கு பரிசுகள் மற்றும் பாராட்டு சான்றிதழ் தமிழ்நாடு முதலமைச்சரால் வழங்கப்பட உள்ளது. நாம் யார் என்பது நம் பேச்சில் தான் தெரியும். நாம் பேசும்போது கருத்துகளை சிந்தித்து அனைவரது மனதிலும் பதியும் வகையில் பேச வேண்டும். பேச்சுப்போட்டி என்பது நாம் யார் என்பதையும், நம் கருத்துகளையும் மற்றவர்களுக்கு உணர்த்த கூடிய நிகழ்ச்சி ஆகும்.

உலகத்தை மாற்றி 3 நபர்களின் உரை இன்று வரை சிறப்பு வாய்ந்ததாக கருதப்படுகிறது. அதற்கு முக்கிய காரணம் அவர்கள் பேசிய கருத்தும், அவர்களது கருத்தை எடுத்துரைத்த விதமும் தான். குறிப்பாக பேச்சு என்பது மற்றவர்கள் நம்மை பற்றி நினைக்கும் எண்ணத்தை நேர்மறையாக மாற்ற கூடிய சக்தி வாய்ந்தது. குறிப்பாக 1963ஆம் ஆண்டு மார்ட்டின் லூதர் கிங் புகழ்பெற்ற "எனக்கு ஒரு கனவு இருக்கிறது" என்று வாஷிங்டனில் வேலைகள், பாதுகாப்பு மற்றும் சுதந்திரத்திற்கான உரையாற்றினார். 1940 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சில் ஐக்கிய நாடாளு மன்றத்தில் "நாம் கடற்கரையில் போராடுவோம்" என்ற தலைப்பில் உலக போரில் இராணுவ படையின் தாக்கம் பற்றியும், படையெடுப்பு முயற்சி, படை வீரியம் குறித்தும் எடுத்துரைத்தார். மேலும்,1961ஆம் ஆண்டு ஜான் எஃப் கென்னடி வாஷிங்டனில் அதிபராக பொறுப் பேற்றபோது பேசிய உரையும் இன்றளவும் சிறப்பு வாய்ந்தாக கருதப்படுகிறது.

அதுபோல தமிழ்நாட்டிலும் அறிஞர் அண்ணா உரை சிறப்பு வாய்ந்த ஒன்றாகும். குறிப்பாக திராவிட கொள்கைய பறைசாற்றும் விதமாகவும், முற்போக்கு சிந்தனையும், ஏழை, எளிய, பிற்படுத்தப்பட்ட மக்களின் குரலாய் அவரது உரை இன்றளவு போற்றப்படுகிறது. முத்தமிழறிஞர் கலைஞர் பேச்சிற்கும், எழுத்திற்கும் எடுத்துக்காட்டாக இன்றளவு திகழ்கிறார்கள். அதுபோல நம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஒவ்வொரு கருத்தும், உரையும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது. துணை முதலமைச்சர் இன்றைய இளைஞர்களுக்கு எடுத்துரைக்கும் வகையில் தனது கருத்துகளை ஆக்கப்பூர்வமாகவும், எளிமையாகவும் எடுத்துரைத்து வருகிறார்கள். இவர்களை போல நீங்களும் பேச்சுப்போட்டியில் தங்கள் கருத்துகளை சிந்தித்து சிறப்பாக வெளிப்படுத்திட வேண்டும். உங்களது ஒவ்வொரு சொல்லும் மற்றவர்களது மனதில் நீங்க இடம் பெறும் வகையில் அமைந்திட வேண்டும். பேச்சுப் போட்டியில் பங்கு பெற்றுள்ள அனைத்து மாணவ, மாணவியர்களுக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கிறேன் என தெரிவித்தார். பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர், ராஜேஸ்குமார் தெரிவி த்தாவது, தமிழ்நாடு முதலமைச்சர் ஏழை, எளிய, பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மையின மக்களின் குரலாய் விளங்கி வருகின்றார்கள். அவர்களுக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வெற்றி பெற்றுள்ளார்கள். ஏழை, எளிய மாணவ, மாணவியர்கள் உயர்கல்வி பயில்வதை ஊக்குவிக்கும் வகையில் மாதம் ரூ.1,000 வழங்கும் புதுமைப்பெண் திட்டம், தமிழ்ப் புதல்வன் திட்டம், மருத்துவம், பொறியியல், சட்டம், வேளாண்மை உள்ளிட்ட உயர் கல்வி பயில 7.5 சதவிகிதம் இட ஒதுக்கீடு உள்ளிட்ட திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார்கள்.

இன்றைய தினம் பாவை கல்லூரியில் தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் சார்பில் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கான பேச்சுப் போட்டி தொடங்கி வைக்கப் பட்டுள்ளது. இப்போட்டியில் சுமார் 30க்கும் மேற்பட்ட அரசு மற்றும் தனியார் கல்லூரிகளை சேர்ந்த 480க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டுள்ளார்கள். குறிப்பாக இராசிபுரம், குமாரபாளையம், நாமக்கல் உள்ளிட்ட பகுதிகளிலிருந்து அரசு கல்லூரி மாணவ, மாணவியர்கள் பங்கு பெற்றுள்ளார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் தாய் மொழியின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. யாதும் ஊரே யாவரும் கேளீர் என்ற தத்துவத்தை மனித குலத்திற்கு அளித்து மொழி சிறப்பினை உலகிற்கு எடுத்துரைத்த மொழி தமிழ் மொழி. தாய் மொழியின் முக்கியத்துவத்தை அறிந்த ரஷ்யா, ஜெர்மனி நாட்டினர் இன்றளவும் தாய் மொழியில் தான் கல்வி கற்பித்து வருகின்றார்கள். தாய்மொழியின் மகத்துவத்தை உணர்ந்தவர்கள். ஆங்கிலம் என்பது தொடர்பு மொழி மட்டுமே. தமிழ் மொழி தான் நம் இனத்தின் அடையாளம். நம் பெருமை. பிற மொழி திணிப்பை நம் அரசு என்றும் ஏற்காது. குறிப்பாக வட மாநிலங்களாகிய மகாராஷ்ட்ராவில் தாய் மொழியை பயன்பாடு குறைந்து வருவதை உணர்ந்த அம்மாநில முதலமைச்சர் அவர்கள் பள்ளிகளில் தாய் மொழியான மராத்தி மொழியை கற்பிக்க உத்தரவிட்டுள்ளார்கள். ஒரு மொழி தான் அந்த இனத்திற்கான அடையாளம். மொழி அழித்தால் அந்த இனம் அழிந்து விடும். தாய் மொழி தான் உயிர் மொழி என்பதை நாம் உணர வேண்டும். மொழி உரிமையை நாம் ஒருபோது விட்டுதர கூடாது என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாநில ஒருங்கிணைப்பாளர்கள் பேராசிரியர் கான்ஸ்ன்டைன் ரவீந்திரன், முனைவர் ஜெ.ஹாஜாகனி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் கிருஷ்ணவேணி, பாவை கல்லூரி நிறுவனர் மற்றும் தலைவர் நடராஜன், கல்லூரி மாணவ, மாணவியர்கள் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# உலக சிறுநீரக தினம் விழிப்புணர்வு பேரணி ஆட்சியர் சிபி ஆதித்யா செந்தில்குமார் துவக்கி வைத்தார்




கடலூர், மார்ச் 15–

உலக சிறுநீரகத் தினத்தினை முன்னிட்டு கடலூர். டவுன்ஹாலில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நடைபெற்ற விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில் குமார் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்ததாவது, நாள்பட்ட சிறுநீரக நோயானது கடந்த 2019ஆம் ஆண்டு கணக்கின்படி உலகளவில் 850 மில்லியன் மக்களை பாதித்துள்ளதாகவும். சுமார் 3.1 மில்லியன் மக்களின் இறப்பிற்கும் காரணமானதாக கணக்கிடப்பட்டுள்ளது. இந்த நாள்பட்ட சிறுநீரக நோயானது தற்போது மனித இறப்பு விகிதத்தை நிர்ணயிப்பதில் 8வது இடத்தை வகிக்கிறது. இதை தடுக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், இந்த நோய் வரும் 2040ஆம் ஆண்டிற்குள் இறப்பு விகிதத்தை நிர்ணயிப்பதில் 8ஆம் இடத்திலிருந்து 5ஆம் இடத்திற்கு முன்னேறிவிடும்.

ஒவ்வொரு ஆண்டும் உலக சிறுநீரக தினம் மார்ச் மாதம் 2வது வியாழன் அன்று உடல்நலத்தில் சிறுநீரகங்களின் பங்கு குறித்தும் சிறுநீரக நோய்கள் வராமல் தடுக்கும் முறைகள் குறித்தும் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் கடைப்பிடிக்கப்படுகிறது.

நாள்பட்ட சிறுநீரக நோய்க்கு சர்க்கரை நோய் மற்றும் இரத்த கொதிப்பு ஆகியன முதல் இரண்டு காரணங்கள் உடல்பருமன். கிருமிதாக்கம். மரபணுநோய்கள், சிறுநீரக கற்கள் அதிகவலி நிவாரணி மருந்துகள் எடுத்துக் கொள்ளுதல் இதர பிற காரணங்கள். ஆரம்ப நிலையில் ரத்தத்தில் யூரியா, கிரியாட்டிரின் மற்றும் சிறுநீரில் ஆல்புமின் முதலிய பரிசோதனைகள் அரசு மருத்துவமனையில் இலவசமாக கண்டறியலாம்.

ஆரம்ப நிலையில் உணவு கட்டுப்பாடு மற்றும் மருந்துகள் நோய் முற்றிய நிலையில் ரத்த சுத்திகரிப்பு வயிற்றின் மூலம் செய்யும் டயாலிசிஸ் (CAPD) மற்றும் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை அவற்றில் டயாலிசிஸ் அனைத்தும் அரசு மருத்துவ மனை களிலும் (சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் முற்றிலும் இலவசமாக) வழங்கப்படுகிறது என தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தலைமை மருத்துவமனை கண்காணிப்பாளர் அசோக் பாஸ்கர், சிறுநீரகவியர் சிறப்பு மருத்துவர் திருமுருகன், மருத்துவர்கள், செவிலியர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# திருவெண்ணெய்நல்லூர் சார் பதிவாளர் அலுவலகம் இடமாற்றம்




திருவெண்ணெய்நல்லூர், மார்ச் 15–

திருவெண்ணெய் நல்லூர் சார் பதிவாளர் அலுவலகம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. திருவெண்ணெய் நல்லூர் சார் பதிவாளர் அலுவலகம் கடந்த 1896ம் ஆண்டு முதல் திருவெண்ணெய்நல்லூர் காவல் நிலையம் எதிரே இயங்கி வந்தது.

தற்போது கட்டடம் சேதமடைந்து, இடிந்து விழும் நிலையில் உள்ளது. இதனால் பொதுப்பணித்துறை சார்பில் புதிய கட்டிடம் கட்ட ரூ.2.32 கோடி நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் துவங்கவுள்ளது. இதனால் சார்பதிவாளர் அலுவலகம் தற்காலிகமாக கடலூர் சாலை தீப்பாஞ்சி அம்மன் கோவில் எதிரே உள்ள தனியார் கட்டிடத்திற்கு இட மாற்றம் செய்யப்பட்டுள்ளது. எனவே பொதுமக்கள் தங்கள் பதிவுத்துறை சம்பந்தமான அனைத்து சேவைகளையும் புதிய இடத்திற்கு சென்று பெறலாம் என சார் பதிவாளர் கோபிநாதன் தெரிவித்துள்ளார்.

# மதுரை அமெரிக்கன் கல்லூரியில் மாவட்ட அளவிலான இளைஞர் பாராளுமன்ற பேச்சுத்திறன் போட்டிக்கான இணையவழி பதிவேற்றம்

மதுரை, மார்ச் 15–

மத்திய அரசின் இளைஞர் நலம் மற்றும் விளையாட்டு அமைச்சகத்தின் கீழ் இயங்கும் சென்னை நாட்டு நலப்பணித் திட்ட மண்டல இயக்குனரகம், நேரு இளையோர் மையம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம் நாட்டு நலப்பணித் திட்டம் சார்பில் தேசிய இளைஞர் பாராளுமன்ற பேச்சு போட்டிகள் நடத்தப்படவிருக்கின்றன.

தலைப்புகள்:மை பாரத் (My bharat) https://mybharat.gov.in/ போர்ட்டலில் பதிவு செய்வதற்கான ஒரு நிமிட காணொளி வளர்ச்சி அடைந்த பாரதம் என்ற தலைப்பின் கீழ் ஒரு நிமிடம் பேசி அதன் வீடியோவைப் பதிவிட வேண்டும். போட்டியில் பங்கேற்க ஆர்வமுள்ள இளைஞர்கள் 24. 2. 2025 அன்று 18 வயது நிறைவு பெற்றவராகவும் 25 வயதுக்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும். மாணவர்கள் மற்றும் மாணவர்கள் அல்லாத இளைஞர்களும் பதிவு செய்யலாம். பொதுமக்களும் பார்வையாளர்களாக கலந்து கொள்ள அனுமதியளிக்கப் படுகிறது. மாவட்ட அளவிலான போட்டிக்கான தலைப்பு ஒரு தேசம் ஒரு தேர்தல் விக்சித் பாரதத்திற்கு வழி வகுத்தல் என்பது ஆகும். மாநில அளவிலான போட்டிக்கான தலைப்பு இந்திய அரசியலமைப்பின் 75 ஆண்டுகள், உரிமைகள், கடமைகள் மற்றும் முன்னேற்றத்திற்கான பயணம் இந்தியாவின் அரசியலமைப்பு மதிப்புகளை வலுப்படுத்துவதற்கான உறுதிமொழி என்பதாகும். தேசிய அளவிலான போட்டிக்கானத் தலைப்பு ஒரு தேசம் ஒரு தேர்தல் ஜனநாயகத்தை எளிமைப்படுத்துதல், முன்னேற்றத்தை பெருக்குதல் நிலைத்தன்மையை உறுதி செய்தல் என்பதாகும்.

போட்டிகள் ஒவ்வொரு மாவட்ட மண்டலங்களிலிருந்தும் 10 பங்கேற்பாளர்கள் அந்தந்த மாநில சாம்பியன்ஷிப் சுற்றுக்கு தகுதி பெறுவார்கள். தேசிய சுற்று மாநில அளவில் தகுதி பெறும் சிறந்த போட்டியாளர்கள் புது தில்லியில் நடைபெறும் விக்ஸித் பாரத் இளைஞர் நாடாளுமன்றத்தின் இறுதிப் போட்டிக்கு அழைக்கப்படுவார்கள்.

மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களைச் சேர்ந்த இளைஞர்களுக்கான பேச்சுப் போட்டிகளை நடத்துவதற்கு இளைஞர் விவகார அமைச்சகம் மற்றும் நாட்டு நலப்பணித் திட்ட இயக்குனரகம் ஆகியவை மதுரை அமெரிக்கன் கல்லூரியைத் தேர்ந்தெடுத்து ஆணை பிறப்பித்துள்ளது. இப்போட்டிகளை நடத்த மதுரை அமெரிக்கன் கல்லூரியின் முதல்வர் மற்றும் செயலர் ம.தவமணி கிறிஸ்டோபர் தலைமையில் நாட்டு நலப்பணித் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர். செல்வன், மதுரை காமராசர் பல்கலைக்கழக நாட்டு நலப்பணித் திட்ட ஒருங்கிணைப்பாளர் மு. பாண்டி ஆகியோர் சிறப்பு அதிகாரிகளாக போட்டிக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். போட்டிகளில் கலந்துகொள்வதற்கான இணைய வழிப்பதிவு தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கிறன. இப்பதிவிற்கான இறுதி நாள்( 16 3 2025) ஞாயிற்றுக்கிழமை அன்று முடிவடைகிறது. இதுகுறித்து அமெரிக்கன் கல்லூரி முதல்வர் மற்றும் செயலர் ம.தவமணி கிறிஸ்டோபர் மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களைச் சார்ந்த இளைஞர்கள் மை பாரத் (mybharat. gov. in) இணையவழி மூலமாக பெரும் திரளாக அதிக எண்ணிக்கையில் பதிவு செய்து மாவட்ட மற்றும் மாநில அளவிலான போட்டிகளில் வெற்றிபெற்று இந்திய நாடாளுமன்ற மைய மண்டபத்தில் நடைபெற உள்ள இறுதிச்சுற்று விவாதத்தில் கலந்துகொண்டு மதுரை மண்டலத்திற்கு நற்பெயர் பெற்றுத்தர வேண்டும் என்றார். மேலும் சிறப்பு அதிகாரியாக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள அமெரிக்கன் கல்லூரியின் நாட்டு நலப்பணித்திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் செல்வன் மற்றும் நாட்டு நலப்படுத்திட்ட மண்டல இயக்குநர் சாமுவேல் செல்லையா, நாட்டு நலப்பணித் அலுவலர்கள், கல்லூரியின் முதல்வர், துணை முதல்வர், துறை தலைவர்கள், பேராசிரியர்கள், நேரு யுவகேந்திரா துணை இயக்குனர் செந்தில்குமார் ஆகியோர் தங்களது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டனர்.

# கலசலிங்கம் பல்கலைக்கழகத்தில் தேசிய தொழில்நுட்பம் சந்திப்பு விழா



சங்கரன்கோவில், மார்ச் 15-

ஸ்ரீவில்லிபுத்தூர், கலசலிங்கம் பல்கலைக்கழகத்தில் பொறியியல், மேலாண்மை, வேளாண்மை, கட்டிடக்கலை, சட்டம், கலை மற்றும் அறிவியல் துறைகளைச் சேர்ந்த மாணவர்களுக்காக 2 நாட்கள் டெக்னோ மேலாண்மை தேசிய சந்திப்பு யூஃபோரியா '25 நடைபெற்றது. நிறைவு விழாவில், வேந்தர் முனைவர் கே.ஸ்ரீதரன் தலைமையில் துணைத் தலைவர் முனைவர் எஸ்.சசி ஆனந்த் 87க்கும் மேற்பட்ட பல்வேறு போட்டிகளில் பங்கேற்று வெற்றிபெற்ற மாணவர்களுக்கு மொத்தம் 18 லட்சத்திற்கும் மேற்பட்ட ரொக்கப் பரிசு மற்றும் சான்றிதழ்களை வழங்கினார். துணைவேந்தர் முனைவர் எஸ்.நாராயணன் மற்றும் பதிவாளர் முனைவர் வி. வாசுதேவன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஜே.பிரதீப் கந்தசாமி அனைவரையும் வரவேற்றார்.

பெங்களூரு, ஐபிஎம் நிறுவன டெலிவரி தலைவர் விகார்டின் சுர்கி, 24 மணிநேர தொடர் ஹேக்கத்தான் போட்டிகளைத் துவக்கி வைத்து கண்காணித்து,சிறப்பாக செயல்பட்ட மாணவர்களுக்கு கம்பெனி அப்ரென்டிஷிப்பிற்கான அனுமதியை அறிவித்து .உரையாற்றினார்.

நாடு முழுவதும் உள்ள பிற கல்விநிறுவனங்களிலிருந்து 3000 மாணவர்களும், கலசலிங்கம் பல்கலையிலிருந்து 4000 மாணவர்களும் பங்கேற்றனர்.

டீன்கள் முனைவர்கள் பி. சிவகுமார் மற்றும் என்.சிவகுமார், பேராசிரியர் எஸ்.கபிலன் ஆகியோர் இயக்குநர்களுடன் ஒருங்கிணைந்து அனைத்துப் பள்ளிகளின் டீன்கள், பேராசிரியர்கள் நிகழ்ச்சிகளை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்னர். பேராசிரியர் பென்னிலோ பெர்னாண்டஸ் நன்றி கூறினார்.

# மாசி மக தீர்த்தவாரி நிகழ்ச்சியில் அன்னதானம் வழங்கல்



புதுச்சேரி, மார்ச் 15-

மாசி மகத்தை முன்னிட்டு புதுச்சேரி வைத்திக்குப்பம் கடற்கரையில் கடல் தீர்த்தவாரி நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் புதுச்சேரி, கடலூர், விழுப்புரம், திண்டிவனம் என அனைத்து ஊர்களிலும் இருந்து உற்சவ மூர்திகள் கொண்டுவரப்பட்டு தீர்த்தவாரி நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு ஸ்வாமி தரிசனம் செய்தனர். இதனை தொடர்ந்து மாசிமகம் கடல் தீர்த்தவாரிக்கு செல்லும் பொதுமக்களுக்கு முத்தியால்பேட்டை தொகுதி திராவிட முன்னேற்ற கழகம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நந்தா சரவணன் ஏற்பாட்டின் பெயரில் பல்வேறு இடங்களில் அன்னதானம், நீர்மோர், பனிக்கூழ் ஆகியவை இலவசமாக வழங்கப்பட்டது. அதன்படி வ.உ.சி நகர், திராவிட முன்னேற்ற கழக கிளை கழகம் சார்பில் ரகுபதி ஏற்பாட்டில் பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் சிறப்பு அழைப்பாளராக முன்னாள் திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினரும் மக்கள் சேவகருமான நந்தா சரவணன் கலந்துகொண்டு பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கினார். மேலும் இந்நிகழ்வின் பொழுது தொகுதி திமுக செயலாளர், சௌரிராஜன், அவை தலைவர் எழிலன், தொகுதி துணை செயலாளர், ரவி மற்றும் திரளான பொதுமக்கள் கலந்து கொண்டனர். இதேபோல் சோலை நகரில் திராவிட முன்னேற்றக் கழக கிளை சார்பில் சரவணன் தலைமையிலும், மணிக்குண்டு அருகில் திராவிட முன்னேற்றக் கழக கிளை அவைத்தலைவர் எழிலன் தலைமையில் அன்னதானம் வழங்கப்பட்டது. இந்நிகழ்வின் பொழுது கழக உறுப்பினர்கள் உடன் இருந்தனர்.

# வில்லியனூர் திருப்பூர் குமரன் அரசு ஆரம்ப பள்ளியில் ஆண்டு விழா



புதுச்சேரி, மார்ச் 15-

புதுச்சேரி வில்லியனூர் தொகுதிக்குட்பட்ட துத்திப்பட்டு பகுதியில் இயங்கி வரும் திருப்பூர் குமரன் அரசு ஆரம்பப் பள்ளியின் ஆண்டு விழா வெகு விமர்சியாக நடைபெற்றது. இவ்விழாவிற்கு சிறப்பு விருந்தினர்களாக புதுச்சேரி வட்டம் ஐந்தின் பள்ளி துணை ஆய்வாளர் சொக்கலிங்கம், உள்ளூர் முக்கிய பிரமுகர் ராதாகிருஷ்ணன், பேங்க் ஆப் பரோடா மேலாளர் ஸ்ரீனிவாசன் ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாணவர்களிடையே சிறப்புரையாற்றினர். தலைமை ஆசிரியர் தேன்மொழி ஆண்டறிக்கையை வாசித்தார். ஆசிரியர் கண்மணி நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவரையும் வரவேற் றார். ஆசிரியர் சச்சி இவ்விழாவினை தொகுத்து வழங்கினார். ஆசிரியர் CCL ஷர்மிளா நிகழ்ச்சியில் கலந்து கொண்ட சிறப்பு விருந்தினர்கள், ஆசிரியர்கள் மாணவர்களின் பெற்றோர்கள் என அனைவருக்கும் நன்றி தெரிவித்தார். பள்ளி மேலாண்மை குழு தலைவி அன்பரசி முன்னிலை வகித்தார். விழாவிற்கான ஏற்பாட்டினை ஆசிரியர்கள் ஜெயசித்ரா தேவி, மீனாட்சி கல்பனா மற்றும் பள்ளி ஊழியர்கள் ஷர்மிளா ரஞ்சிதம் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.

# மினி பேருந்து இயக்க புதிய வழித்தடங்கள் அமைத்தல் குறித்து ஆய்வுக் கூட்டம்



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மினி பேருந்து இயக்க புதிய வழித்தடங்கள் அமைத்தல் குறித்த ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் இளம்பகவத் தலைமையில் நடைபெற்றது.

# மண்டபம் ஊராட்சி ஒன்றிய துவக்க பள்ளி ஆண்டு விழா



ராமநாதபுரம், மார்ச் 15-

பிள்ளைமடம் கிராமத்தில் உள்ள மண்டபம் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் பொறுப்பு ஆசிரியர் சுஜாதா மற்றும் பௌலிங் முயற்சியில் பள்ளியின் இரண்டாம் ஆண்டு விழா கிராம தலைவர் முத்துமாரி, துணைத் தலைவர் நாகுச்சாமி, பொருளாளர் களஞ்சியம் தலைமையில் பெற்றோர் ஆசிரியர் சங்க தலைவி மற்றும் முன்னாள் ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், சத்துணவு பணியாளர்கள், கிராம பொதுமக்கள் முன்னிலையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் பள்ளியின் சார்பாகவும் கிராமத்தின் சார்பாகவும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். துவக்கப் பள்ளியில் படித்து வரும் சிறுவர், சிறுமியரின் கலைநிகழ்ச்சிகளை பொதுமக்கள் கண்டுகளித்து பாராட்டினர்.

# புதுச்சேரியில் புதிய மதுபான ஆலைகளுக்கு ரூ.10 கோடிக்கு மேல் அரசு லஞ்சம் வாங்கியுள்ளது

## முன்னாள் முதலமைச்சர் நாராயணசாமி குற்றச்சாட்டு



காரைக்கால், மார்ச் 15-

புதுச்சேரியில் புதிய மதுபான ஆலைகளுக்கு ரூபாய் பத்து கோடிக்கு மேல் இந்த அரசு லஞ்சம் வாங்கியுள்ளது. என புதுச்சேரி முன்னாள் முதலமைச்சர் நாராயணசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

புதுச்சேரி முன்னாள் முதலமைச்சர் நாராயணசாமி நேற்று காரைக்கால் வருகை தந்தார். தொடர்ந்து அவர் நிருபர்களிடம் கூறியதாவது, புதுச்சேரியில் எனது தலைமையில் காங்கிரஸ் திமுக கூட்டணி அரசு இருந்த போது, மத்திய அரசால் நிர்பந்திக்கப்பட்ட தேசிய கல்விக்கொள்கையை ஏற்காமல் அமைச்சரவையிலும், சட்டப்பேரவையிலும் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆனால், இந்தி மொழியை திணிக்கும் மத்திய அரசின் முயற்சியை புதுச்சேரியில் என்.ஆர். காங்கிரஸ் பா ஜனதா அரசு ஆதரிக்கிறது. அது மட்டுமல்லாமல் புதுச்சேரியில் அவசரகதியில் சிபிஎஸ்இ பாடத்திட்டத்தை அமல்படுத்தியதால், கல்வி போதிக்கும் ஆசிரியர்களும், கல்வி கற்கும் மாணவர்களும் மிகவும் திணறி வருகின்றனர். இந்நிலையில் முதல்முறையாக இந்த ஆண்டு 10 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்கள் தேர்வு எழுதுவதை மிக கடினமாக கருத வேண்டி உள்ளது. மத்திய பா ஜனதா அரசு அனைத்து மாநிலங்களிலும் இந்தியை திணிக்கும் வகையில் மும்மொழி கொள்கையை தீவிரமாக்கி வருகிறது. வட மாநிலங்களில் ஹிந்தியை மட்டுமே முதன்மை மொழியாக கொண்டு, இரண்டாம் மூன்றாம் மொழியை அமுல்படுத்த மத்திய பா ஜனதா அரசு மறுத்து வருகிறது. புதுச்சேரியில் முதலமைச்சர் ரங்கசாமி அரசு இதுவரை ரூ.4 ஆயிரம் கோடி கடன் வாங்கியுள்ளது. ஏற்கெனவே ரூ.8,500 கோடி கடன் நிலுவை உள்ளது. மேலும் பல நிலைகளில் ரூ.7,500 கோடி கடன் பெற முயற்சிப்பது, புதுச்சேரி மக்கள் மீது சுமையை ஏற்படுத்தும். ரங்கசாமி வெறும் அறிவிப்புகளை செய்யும் அறிவிப்பு முதல்வராகவே இருக்கிறார். புதுச் சேரியில் 6 மதுபான தொழிற்சாலை அமைக்க அனுமதித்துள்ளதாக முதலமைச்சர் ரங்கசாமி கூறியுள்ளார். புதுச்சேரிக்கு இது தேவையற்றது. ஒரு ஆலைக்கு ரூ.10 கோடிக்கு மேல் இந்த அரசு லஞ்சம் பெறப்பட்டுள்ளது. நான் முதலமைச்சராக இருந்தபோது, புதுச்சேரி மாநிலம் முழுவதும் கூடுதலாக ஒரு மதுபான கடையை கூட திறக்க முன்வரவில்லை. ஆனால் தற்போதைய முதலமைச்சர் ரங்கசாமி அரசு, ரெஸ்டோ பார் என்ற வகையில் ஏராளமான மது கடைகளை திறந்து இருப்பது கண்டனத்துக்குரியது. அது மட்டுமல்லாமல் ஏராளமான மது உற்பத்தி சாலைகளுக்கும் உரிமம் வழங்கி இருப்பது கடும் கண்டனத்துக் குரியது. புதுச்சேரியை மட்டும் கண்காணித்து காரைக்காலை தொடர்ந்து புறக்கணித்து வருகிறது. காரைக்காலில் அரசு மருத்துவக் கல்லூரி அமைக்கப்படும் என 2023ம் ஆண்டு அறிவிக்கப்பட்டது இன்னும் செயல்பாட்டுக்கு வரவில்லை. அதே போல் அண்மையில் வீசிய புயலில் பாதிக்கப்பட்டவர்களுக்கான முழுமையான தொகையை இதுவரை ரங்கசாமி அரசு வழங்கவில்லை. பெண்களுக்கான மாதம் ரூபாய் ஆயிரத்தை 2500ஆக முதலமைச்சர் உயர்த்தியுள்ளார். ஆனால் பட்ஜெட்டில் அதற்கான நிதி ஒதுக்கப்படவில்லை. ஏற்கனவே மாதம் ரூபாய் 1000 சொற்ப நபர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. இன்னும் பலருக்கு வழங்க வேண்டிய உள்ளது. இந்நிலையில் உயர்த்தப்பட்ட 2500 எப்படி வழங்கப்படும் என்பதற்கான விளக்கம் இல்லை. இந்நிலையில் மிகவும் அவதி உற்று வரும் மக்கள், வரும் 2026 தேர்தலில் புதுச்சேரி மக்கள் ரங்கசாமி, பாஜகவுக்கு பாடம் புகட்டுவார்கள். 2026 இல் மீண்டும் காங்கிரஸ் புதுச்சேரியில் ஆட்சி அமைத்து என்.ஆர் காங்கிரஸ் மற்றும் பா ஜனதா கூட்டணி அரசுக்கு பாடம் புகட்டும். தமிழக பட்ஜெட் ஆவணத்தில் தமிழில் ரூபாய் இலச்சினை இடம்பெற்றிருப்பதை மத்திய நிதியமைச்சர் விமர்சனம் செய்துள்ளார். அதனால் எந்த பாதிப்பும் இல்லை. தமிழக அரசை முடக்கிவிடலாம் என மத்திய அரசு நினைப்பது நடக்காது, அதேபோல் மும்மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்தாத தமிழக அரசுக்கு கல்வி நிதியை மத்திய அரசு மறுத்து வருவது கடும் கண்டனத்துக் குரியது. புதுச்சேரியில் மீண்டும் காங்கிரஸ் திமுக கூட்டணி அரசு ஆட்சி அமைக்கும் பட்சத்தில், தற் போதுள்ள மும்மொழி கொள்கையை ரத்து செய்வோம் என்றார். பேட்டியின் போது, மாநில செயலாளர் மோகனவேல், மாவட்ட பொதுச் செயலாளர் ஆர் எஸ். கருணாநிதி, மாவட்ட இளைஞர் காங்கிரஸ் தலைவர் ரஞ்சித், மூத்த நிர்வாகி சோழசிங்கராயர் மற்றும் பலர் உடன் இருந்தனர்.

மாலை எக்ஸ்பிரஸ்

# செம்மார் அரசு நடுநிலை பள்ளி ஆண்டு விழா





**திருவெண்ணெய்நல்லூர், மார்ச் 15–**

திருவெண்ணெய்நல்லூர் அருகே செம்மார் கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய அரசு நடுநிலைப் பள்ளியில் ஆண்டு விழா கோலாகலமாக நடைபெற்றது. விழாவிற்கு பள்ளி தலைமை ஆசிரியர் முத்துக்குமரன் தலைமை தாங்கினார். ஊராட்சி மன்ற தலைவர் ஷீபாராணி ஏழுமலை, துணைத் தலைவர் தேன்மொழி சீனிவாசன், பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் ராஜேந்திரன், பள்ளி மேலாண்மை குழு தலைவர் குணசுந்தரி கமலசேகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழாவில் வட்டார வளர்ச்சி அலுவலர் பாலசுப்பிரமணியன் ,காவல் உதவி ஆய்வாளர் பாலசிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு பள்ளி மாணவ, மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கி கௌரவித்தனர்.

அதனைத் தொடர்ந்து பள்ளி மாணவ, மாணவிகளின் ஆடல், பாடல், கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது. இதில் வார்டு உறுப்பினர்கள் சிவசங்கரி, சுகந்தி, லதா, குணசேகர், உமா மற்றும் பள்ளி ஆசிரியர்கள், பெற்றோர்கள், ஊர் பொது மக்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். இறுதியாக கல்வியாளர் சிவ ஏழுமலை நன்றி கூறினார்.

# பெண்களுக்கு கராத்தே பயிற்சி முகாம்





**காரைக்கால், மார்ச் 15–**

பாண்டிச்சேரி யுனிவர்சிட்டி காரைக்கால் கேம்பஸில் இண்டர் நேஷனல் வி.ஆர்.எஸ். மார்ஷியல் ஆர்ட்ஸ் அகாடமி மற்றும் ஜாப்பனீஸ் கோஜு ரியு ஸ்போர்ட்ஸ் கராத்தே அசோசியேசன் சார்பில் பெண்களுக்கான கராத்தே தற்காப்புக்கலை பயிற்சி முகாம் சிறப்பாக நடைபெற்றது.

இப்பயிற்சி முகாமில் நூறுக்கும் மேற்பட்ட மாணவிகள் கலந்து கொண்டனர். இதில் தலைமை பயிற்சியாளர் கிராண்ட் மாஸ்டர் வி.ஆர்.எஸ். குமார் மாணவிகளுக்கு தற்காப்புகலை பயிற்சி அளித்தார். அகாடமி வீரர் மற்றும் வீராங்கனைகள் பல்வேறு தற்காப்புக்கலை சாகச நிகழ்ச்சிகளை செய்து காட்டினர். இந்த பயிற்சி முகாமில் இண்டர் நேஷனல் கம்ப்ளியன்ஸ் கமிட்டி விரிவுரையாளர் – மைய தலைவர் பாண்டிச்சேரி பல்கலைகழகம், காரைக்கால் வளாகம் கன்வெனர் டாக்டர் எஸ் புவனேஷ்வரி மற்றும் ஒருங்கிணைப்பாளர்கள் விரிவுரையாளர் டாக்டர் டி எச்.மாலினி, உதவி பேராசிரியர் டாக்டர் பி.நிர்மளா– உதவி பேராசிரியர் டாக்டர் என் எம். மணிமொழி ஆகியோர் உடன் இருந்தனர். நிகழ்ச்சியில் இறுதியாக கிராண்ட் மாஸ்டர் டாக்டர் வி.ஆர்.எஸ்.குமாருக்கு குழுவினர் பொன்னாடை போற்றி நினைவு பரிசுகளை வழங்கினர்.

# சிறுதானிய விழாவினை முன்னிட்டு நடைபெற்ற போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசு : ஆட்சியர் சிபி ஆதித்யா செந்தில்குமார் வழங்கினார்



**கடலூர், மார்ச் 15–**

சிறுதானிய விழாவினை முன்னிட்டு நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் பரிசுகளை வழங்கினார்.

2023ஆம் ஆண்டை சர்வதேச சிறுதானிய ஆண்டாக அறிவித்ததை தொடர்ந்து, ஆண்டுதோறும் சிறுதானிய ஆண்டு விழா கொண்டாடப்பட்டு வருகிறது. அதன்படி, கடலூர் மாவட்டத்தில் கடலூர், அண்ணா கிராமம், பண்ருட்டி, குறிஞ்சிப்பாடி, காட்டுமன்னார்கோயில், குமராட்சி, கீரப்பாளையம், மேல்புவனகிரி, பரங்கிப்பேட்டை, விருத்தாசலம், கம்மாபுரம், நல்லூர், மங்களூர், ஸ்ரீமுஷ்ணம் ஆகிய வட்டாரங்களில் உள்ள சத்துணவு பணியாளர்களுக்கு மாவட்ட அளவிலான சிறுதானிய சமையல் போட்டி கடலூர் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் நடைபெற்றது. கடலூர், மாவட்ட முதன்மை கல்வி அலுவலக வளாகத்தில் மாவட்ட அளவில் சிறுதானியம் குறித்த விழிப்புணர்வு வினாடி வினா போட்டியில் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளைச் சேர்ந்த 39 பள்ளி மாணவ, மாணவியர்கள் பங்கேற்றனர்.

இன்றைய தினம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சிபி ஆதித்யா செந்தில்குமார் சிறுதானிய வகை உணவுகள் குறித்த கண்காட்சி அமைக்கப்பட்டிருந்ததை பார்வையிட்டு, மாவட்ட அளவில் நடைபெற்ற சிறுதானிய சமையல் போட்டியில் கடலூர் வட்டார சத்துணவு பணியாளர்கள் முதலிடமும், அண்ணாகிராமம் வட்டார சத்துணவு பணியாளர்கள் இரண்டாமிடமும், குறிஞ்சிப்பாடி மற்றும் கம்மாபுரம் வட்டார சத்துணவு பணியாளர்கள் மூன்றாமிடம் பெற்று வெற்றிபெற்றவர்களுக்கும், மாவட்ட அளவில் சிறுதானிய விழிப்புணர்வு வினாடி வினா போட்டியில் காட்டுமன்னார் கோயில் பி.ஆர்.ஜி அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவன் முதலிடமும், கோ.ஆதனூர் அரசு உயர்நிலைப் பள்ளியில் பயிலும், மாணவி எம்.வைஷ்ணவி இரண்டாமிடமும், கடலூர் ஸ்ரீவரதம் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவி செ.பு.அஷ்யாஸ்ரீ மூன்றாமிடமும் பெற்று வெற்றி பெற்றவர்களை பாராட்டி சான்றிதழ்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு) மீனா, மாவட்ட கல்வி அலுவலர் ஞானசங்கரன் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# கர்ப்பிணி தாய்மார்களுக்கு சமுதாய வளைகாப்பு விழா



**வேலூர், மார்ச் 15–**

வேலூர் மாவட்டம் அணைக்கட்டு வட்டம் அணைக்கட்டு சட்டமன்றத் தொகுதி உட்பட்ட பகுதியில் திமுக சார்பில் திமுக தலைவரும் தமிழக முதல்வருமான மு க ஸ்டாலின் 72 வது பிறந்தநாள் முன்னிட்டு கர்ப்பிணி தாய்மார்களுக்கு சமுதாய வளைகாப்பு விழா அணைக்கட்டு அடுத்த கங்கநல்லூர் கலைஞர் நூற்றாண்டு விழா மேடை மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு வேலூர் மாவட்ட திமுக செயலாளர் அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினர் ஏ.பி. நந்தகுமார் தலைமை தாங்கினார். 1072 கர்ப்பிணி தாய்மார்களுக்கு பூ, பழம், தேங்காய், மஞ்சள், குங்கும,ம் புடவை, வளையல் என சீர்வாசையுடன் வளைகாப்பு நடத்தி வைத்து திமுக பொதுச்செயலாளரும் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் வாழ்த்துரை வழங்கினார்.

இதில் வேலூர் சட்டமன்ற உறுப்பினர் கார்த்திகேயன் குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமுலு விஜயன், மாவட்ட அவைத் தலைவர் முகமது சகி, மாவட்ட ஊராட்சி குழு திட்டக்குழு தலைவர் மு. பாபு, ஒன்றிய செயலாளர்கள் வெங்கடேசன், குமார பாண்டியன், ஞானசேகரன், கஜேந்திரன், பகுதி செயலாளர் ஐயப்பன் தங்கதுரை, பேரூராட்சி செயலாளர் ஜாகிர் உசேன் பெருமாள் ராஜா அருள்நாதன், மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய பகுதி மற்றும் பேரூராட்சி கழக நிர்வாகிகள், மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகளும், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், மாவட்ட வார்டு ஊர் கிளை நிர்வாகிகளும், பொது மக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் வளர்ச்சி திட்டப்பணிகளை ஆட்சியர் ஆய்வு



**ஈரோடு, மார்ச் 15–**

ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஒத்தக்குதிரை, பொம்மநாயக்கன் பாளையம்,பொலவகாளி பாளையம் ஊராட்சிகள் மற்றும் கோபிசெட்டி பாளையம் நகராட்சிப் பகுதிகளில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் ராஜ கோபால் சுன்கரா நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், கோபிசெட்டி பாளையம் ஊராட்சி ஒன்றியம். ஒத்தக்குதிரை பகுதியில் செயல்பட்டு வரும் முதல்வர் மருந்தகத்தினை பார்வையிட்டு. ஆய்வு மேற்கொண்டு, அதன் செயல்பாடுகள் குறித்து கேட்டறிந்தார்.

அதனைத் தொடர்ந்து கோபி செட்டிபாளையம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ஆய்வு மேற்கொண்டு, ஊராட்சி ஒன்றியத்தில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் கணினியில் பதிவேற்றம் செய்யப்படுவதை பார்வையிட்டு, திட்டங்களின் நிலை குறித்து சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் கேட்டறிந்தார். மேலும், மகாத்மா காந்தி வேலை உறுதித் திட்டம் பிரிவு. ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையம் பொறியியல் பிரிவு ஆகியவற்றை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து, பொம்மநாயக்கன் பாளையம் ஏடி காலனியில் ஊரக குடியிருப்புகள் சீரமைத்தல் திட்டத்தின் கீழ் ரூ.18 லட்சம் மதிப்பீட்டில் 12 வீடுகள் சீரமைக்கப்பட்டு வருவதையொட்டி, பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பணிகளை குறித்த காலத்தில் முடித்திட வேண்டும் என அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். மேலும், ஒவ்வொரு வீடுகளுக்கும் முறையாக கழிப்பிட வசதி உள்ளதா என அலுவலர்களிடம் கேட்டறிந்தார். அதனைத் தொடர்ந்து பொம்மநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் ரூ.1.86 லட்சம் மதிப்பீட்டில் மாணவ, மாணவியர்கள் கழிவறை சீரமைக்கப்பட்டதை பார்வையிட்டு, அங்கு பராமரிக்கப்பட்டு வரும் பதிவேடுகளை பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார். மேலும் மாணவர்களின் ஆங்கில கற்றல் திறன், எண்ணும் எழுத்தும் திட்டத்தின் கீழ் மாணவ, மாணவியர்களின் தற்போதைய கற்றல் திறன் ஆகியவற்றை கேட்டறிந்தார்.

தொடர்ந்து, பொலவகாளி பாளையம் ஊராட்சியில், வேளாண்மை உழவர் நலத்துறையின் சார்பில் வேளாண் இயந்திரமாக்கல் திட்டத்தின் கீழ் திரு.திருமூர்த்தி என்பவர் ரூ.1.51 லட்சம் மதிப்பீட்டில் ரூ.47,000 மானியத்தில் ரோட்டோவேட்டர் பெற்றுள்ளதை பார்வையிட்டு, அதன் செயல்பாடுகள் குறித்து கேட்டறிந்தார்.

தொடர்ந்து, பொலவகாளி பாளையம் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் மாணவர்களின் ஆய்வு மேற்கொண்டு, மாணவர்களின் வருகை, தேர்ச்சி விகிதத்தினை கேட்டறிந்து, பராமரிக்கப்படும் பதிவேடுகளை பார்வையிட்டார். மேலும், கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் ரூ.9.96 கோடி மதிப்பீட்டில் 4.00 எம்.எல்.டி. கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் 20 கே.எல்.டி கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டு வருவதை நேரில் சென்று பார்வையிட்டு, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

தொடர்ந்து, தமிழ்நாடு அரசின் "நான் முதல்வன் திட்டத்தின்" கீழ் பாலிடெக்னிக் மற்றும் தொழில்துறை பயிற்சி நிலைய மாணவர்களுக்கு சிழிசி மெஷினிங் திறன் பயிற்சி வழங்கும் பெருந்துறையில் அமைந்துள்ள DMW CNC Solutions India pvt ltd நிறுவனத்தை பார்வையிட்டு, அங்கு சிழிசி இயந்திரம் மூலம் ஆட்டோமொபைல் உதிரி பாகங்கள் தயாரிக்கும் பயிற்சி பெறும் சேலம் அரசு பொறியியல் கல்லூரியைச் சேர்ந்த, மாணவ, மாணவர்களுடன் கலந்துரையாடினார்.

இந்த ஆய்வுகளின்போது, கோபிசெட்டிபாளையம் நகராட்சி ஆணையாளர் சுபாஷினி, பொது மேலாளர் (மாவட்ட தொழில் மையம்) திருமுருகன், கோபிசெட்டிபாளையம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பிரவீன் குமார், சக்திவேல் உட்பட தொடர்புடைய துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

# மதுரையில் அறிவியல் கருத்தரங்கம்



**மதுரை, மார்ச் 15–**

அமெரிக்கன் கல்லூரி ஆராய்ச்சி, முதுகலை வேதியியல் துறை மற்றும் முதுகலை வேதியல் துறை முன்னாள் மாணவர்கள் இணைந்து, அறிவியல் கருத்தரங்கம் நடத்தப்பட்டது. வேதியல் துறையின் தலைவர் முனைவர் ஜான் அடைக்கலசாமி வரவேற்புரை ஆற்றினார். இதில் கல்லூரி முதல்வர் முனைவர் தவமணி கிறிஸ்டோபர் பங்கேற்று தலைமை உரை ஆற்றினார். முன்னாள் மாணவர்கள் மற்றும் அவர்களின் பங்களிப்பை குறித்து மேற்கோள் காட்டினார். ஒவ்வொரு வருடமும் உலகெங்கும் இருக்கின்ற வேதியல் துறையை சார்ந்த முன்னாள் மாணவர்கள் தலைமை எடுத்து கருத்தரங்கை ஏற்படுத்தி, அமெரிக்கன் கல்லூரி வேதியியல் துறை மாணவர்களுக்கு ஆராய்ச்சி சார்ந்த முன்நோக்கு விழிப்புணர்வு கொடுப்பார்கள். இன்றைய கருத்தரங்கில் முனைவர் அன்பரசன் மிமிஜி சென்னை மற்றும் முனைவர் ராஜமித்ரா மிமிஜி கோவா ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக பேசினார்கள். துறையின் பேராசிரியர்கள் கருத்தரங்கின் நிகழ்வை நடத்தினார்கள். மாணவர்கள் சிறப்பு அழைப்பாளர்களோடு கலந்துரையாடினர். முன்னாள் மாணவர் விக்னேஷ் அனைவருக்கும் நன்றி கூறினார்.

# பயனாளிகளுக்கு திருமண உதவித்தொகை எதிர்கட்சி தலைவர் சிவா வழங்கினார்



**புதுச்சேரி, மார்ச் 15–**

புதுச்சேரி அரசு ஆதிதிராவிடர் நலம் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில், வில்லியனூர் தொகுதியில் வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் பெண் பயனாளிகளுக்கு திருமண உதவித் தொகை வழங்கும் நிகழ்ச்சி நேற்று நடந்தது. தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் நடந்த நிகழ்ச்சியில், தொகுதியை சேர்ந்த ஆதி திரவிடர் மற்றும் பழங்குடி பிரிவை சேர்ந்த 25 பயனாளிகளுக்கு தலா ரூ.1 லட்சம் வீதம் ரூ.25 லட்சத்திற்கான திருமண உதவித் தொகைக்கான ஆணைகளை சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரும், தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான சிவா வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தி.மு.க. நிர்வாகிகள் தொகுதி செயலாளர் மணிகண்டன், இலக்கிய அணி அமைப்பாளர் சீனு மோகன்தாஸ், ஆதிதிராவிடர் அணி அமைப்பாளர் செல்வநாதன், தொமுச தலைவர் அங்காளன், ஆதிதிராவிடர் அணி தலைவர் பழனிசசாமி, ஆதிதிராவிடர் அணி துணைத் தலைவர் கதிரவன், தொகுதி துணை செயலாளர்கள் அரிகிருஷ்ணன், ஜெகன்மோகன்,, தொகுதி செயற்குழு உறுப்பினர் ஏழுமலை, மற்றும் ராஜி, மிலிட்டரி முருகன், தங்கராசு, வெங்கடேசன், பாலகிருஷ்ணன், சுரேஷ், முருகன், வீரக்கண்ணு, அஞ்சாபுலி, அன்பு, சிவக்குமார், தயாளன், வீரமுத்து, சிலம்பு உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# காங்கிரஸ் தலைவர் ஆர்பி சந்திரமோகனுக்கு நாராயணசாமி பிறந்தநாள் வாழ்த்து



**காரைக்கால், மார்ச் 15–**

காரைக்கால் மாவட்ட காங்கிரஸ் கட்சி தலைவர் ஆர்பி சந்திரமோகன் பிறந்த நாளை முன்னிட்டு, புதுச்சேரி முன்னாள் முதலமைச்சர் நாராயணசாமி நேற்று மாலை பூங்கொத்து கொடுத்து வாழ்த்தினார். அருகில் முன்னாள் அமைச்சர் கமலக்கண்ணன், மாவட்ட பொதுச் செயலாளர் ஆர்எஸ் கருணாநிதி, இளைஞர் காங்கிரஸ் தலைவர் ஏஎம் ரஞ்சித், வட்டார தலைவர் சுப்பையன், சோழ சிங்காராயர், மாறன், மோகனவேல் மற்றும் பலர் உள்ளனர்.

# குற்றாலம் ஸ்ரீபராசக்தி மகளிர் கல்லூரியில் கருத்தரங்கம்



**தென்காசி, மார்ச் 15–**

தென்காசி மாவட்டம் குற்றாலம் ஸ்ரீபராசக்தி மகளிர் கல்லூரியில் தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் தமிழறி ஞர்கள், எழுத்தாளர்கள் நினைவினை போற்றும் இலக்கிய கருத்தரங்கம் மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது.

தென்காசி மாவட்டம் கு றாலம் ஸ்ரீபராசக்தி மகளிர் கல்லூரியில் தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் தமிழறிஞர் கள், எழுத்தாளர்கள் நினைவினை போற்றும் இலக்கிய கருத்தரங்கம் மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயச்சந்திரன் தலைமையில், அரசு இசைப்பள்ளி மாணவர்கள் மங்கள இசையுடன் நடைபெற்றது.

தென்காசி மாவட்டத்தை சார்ந்த மறைந்த தமிழறிஞர்களின் வாழ்க்கை வரலாறு மற்றும் சிறப்புகள் அவர்கள் எழுதிய நூல்கள், தமிழுக்கு அவர்கள் ஆற்றிய தொண்டுகள் குறித்தும், திரிகூட ராசப்பக் கவிராயர் குறித்து மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் குறித்தும், முனைவர் சா.வே. சுப்பிரமணியன் குறித்தும், எழுத்தாளர் சு. சமுத்திரம் குறித்தும் கருத்தாளர்கள் கருத்துரை வழங்கினர்.

இக்கருத்தரங்கத்திற்கு முன்னர், 06.02.2025 அன்று தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் நடத்தப்பட்ட தமிழறி ஞர்கள், எழுத்தாளர்கள் நினைவு போற்றும் பேச்சுப்போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு முதல் பரிசுத் தொகை ரூ. 5,000, இரண்டாம் பரிசுத் தொகை ரூ.3,000, மூன்றாம் பரிசுத் தொகை ரூ. 2,000 எனவும், கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு முதல் பரிசுத் தொகை ரூ. 5,000, இரண்டாம் பரிசுத் தொகை ரூ. 3,000, மூன்றாம் பரிசுத் தொகை ரூ.2,000 மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயச்சந்திரன் வழங்கினார்கள். இக்கருத்தரங்கில், மண்டிலத் தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் சுந்தர், தூத்துக்குடி இந்து சமய அறநிலையத் துறை இணை ஆணையர் மற்றும் கல்லூரி செயலர் அன்புமணி, குற்றாலம் ஸ்ரீபராசக்தி மகளிர் கல்லூரி முதல்வர் முனைவர் பெ.நாகேஸ்வரி, மரபின் மைந்தன் முத்தையா, பாவா ணர் கோட்டம் ஒருங்கிணைப்பாளர் இல.நிலவழகன். தென்காசி உலகத் தமிழ்க் கழகம் இணைத் தலைவர் மு.நா.பா. தமிழ்வாணன், குற்றாலம், ஸ்ரீபராசக்தி மகளிர் கல்லூரி தமிழ்த்துறை ஆய்வு மையம் இணைப் பேராசிரியர் முனைவர். சு.பார்வதி மற்றும் தமிழறிஞர்கள், அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள். தமிழ் அமைப்புகள், கல்லூரி பேராசிரியர்கள், கல்லூரி மாணவ, மாணவியர்கள், அரசு அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் செயல்பாடுகளை ஆட்சியர் ஆய்வு



**தூத்துக்குடி, மார்ச் 15–**

தூத்துக்குடி மாவட்டம் ஏரல் வட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் செயல்படும் மஞ்சள்நீர்காயலில் உள்ள 20 மி.கா கொள்ளளவு கொண்ட குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் செயல்பாடுகளை மாவட்ட ஆட்சித்தலைவர் இளம்பகவத் செய்தியாளர்களுடன் சென்று பார்வையிட்டார்.

இந்த ஆய்வின்போது மாவட்ட ஆட்சித்தலைவர் இளம்பகவத் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது: தூத்துக்குடி மாவட்டத்தைச் சுற்றியுள்ள தொழிற் கூடங்களுக்கு குடிநீர் வழங்குவதற்கான 20MGD குடிநீர் திட்டத்தை நிறுவ தமிழ்நாடு அரசு உத்தரவிட்டு அனுமதித்தது.

அதன்படி 20 MGD நீர் வழங்கல் திட்டம் 1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் செயல்படுத்தப்பட்டு முடிக்கப் பட்டது. முன்னோடி நீர் வழங்கல் 01.11.1973 அன்று செயல்படுத்தப் பட்டது மற்றும் வழக்கமான நீர் வழங்கல் 28.02.1975 முதல் இயக்கப்பட்டது. இந்தத் திட்டம் தொடக்கத்திலிருந்தே தமிழ்நாடு நீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வருகிறது. தூத்துக்குடி அனல் மின் உற்பத்தி மற்றும் அதைச் சுற்றியுள்ள முக்கிய தொழில்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் ஒரு மதிப்புமிக்க திட்டமாகும். இது தேசிய உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கு பங்களிக்கிறது.

முன்னதாக, இந்தத் திட்டத்தின் தலைமைப் பணியிடம் இருவப்பபுரம் அருகே அமைந்தது. இதில் (1) மூல நீர் உட்செலுத்தலுக்கான ஒழுங்கு முறை RCC குழாய் (2) மூல நீர் சம்ப் மற்றும் பம்ப் ஹவுஸ் (3) 80 HP டர்பைன் மூல நீர் பம்புசெட்களின் 4 எண்ணிக்கை (34100 lpm x 8.5 மீ Head) அடங்கியுள்ளன. இத்திட்டத் தில் தாமிரபரணி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்ட ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டில் இருந்து தண்ணீரைப் பெறும் வடக்கு பிரதான வாய்க்காலின் மேற்பரப்பு நீரெடுத்து நீரேற்றம் செய்யப்பட்டது. கோடை காலத்தில், வடக்கு பிரதான வாய்க்காலில் நீரோட்டம் இல்லாதபோது அருகிலுள்ள ஆறுமுகமங்கலம் குளத்தில் தண்ணீர் சேமிக்கப்பட்டு, இத்திட்டத்திற்காக நீரேற்றம் செய்யப்பட்டது. திட்டத்தின் மொத்த வடிவமைக்கப்பட்ட கொள்ளளவு 20 MGD மற்றும் வடிவமைக்கப்பட்ட நீரேற்ற காலம் ஒரு நாளைக்கு 24 மணிநேரம் ஆகும்.

தலைமைப் பணியிடத்திலுள்ள தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டியில் சேகரிக்கப்படும் நீர், 34100 LPM x 8.5 மீ அளவுள்ள 80HP செங்குத்து Turbine பம்புசெட்கள் 2 மூலம் நீரேற்றம் செய்யப்பட்டு மஞ்சள்நீர்க்காயலில் அமைந்துள்ள சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிக்கு 3780 மீ நீளம் கொண்ட 1200 மிமீ PSC மூலம் வந்தடைகிறது.

ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டில் இருந்து மூடிய குழாய் அமைப்பு மூலம் சுத்திகரிப்பு நிலையத்திற்கு தண்ணீரை கொண்டு வரப்படுகிறது. மூடிய குழாய் திட்டம் ரூ.2800 லட்சத்தில் செயல்படுத்தப் பட்டுள்ளது.

20 விநிஞ் குடிநீர் திட்டத்திற்காக ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டின் மேல்பகுதியில் உள்ள தாமிரபரணி நதியில் 10மீ விட்டமுள்ள நீர் உட்கொள்ளும் கிணறு நிறுவப்பட்டுள்ளது. பின் அங்கிருந்து நீரேற்றம் செய்யப்பட்டு பேட்மாநகரம் அருகே உள்ள Ridge pointல் உள்ள 20LL கொள்ளளவு கொண்ட தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிற்கு 400பிறி செங்குத்து Turbine பம்ப்செட்டுகள் (31570 lpmx 43 மீ head) மற்றும் 1000 மிமீ PSC குழாய் 8035மீ மூலமாக நீரேற்றம் செய்யப்படுகிறது. சம்பிலிருந்து சேகரிக்கப்படும் நீர் ஈர்ப்பு விசையியக்கக் குழாய்கள் BWSC மற்றும் றிஷிசி மூலம் 13829மீ தொலைவில் உள்ள சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு செல்லப்படுகிறது.

மஞ்சள்நீர்க்காயலில் அமைந்துள்ள முழு அளவிலான சுத்திகரிப்பு அமைப்பு மூலம் மூல நீர் சுத்திகரிக்கப்படுகிறது. பின் அங்கிருந்து சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் 1200 மிமீ விட்டம் கொண்ட குடிநீர் குழாய் மற்றும் 31600 LPM 15 மீட்டர் head கொண்ட 135 HP செங்குத்து Turbine பம்புசெட்டுகள் மூலம் பயனாளிகளுக்கு நீரேற்றம் செய்யப்படுகிறது. பயனாளிகளின் தத்தமது வரையறைக்குள் நிறுவப்பட்டுள்ள வாட்டர் மீட்டர்கள் மூலம் குடிநீர் அளவீடு செய்யப்படுகிறது. தற்போது பயனாளிகளுக்கு இத்திட்டத்தின் மூலம் அவர்களின் தேவைக்கேற்ப 7 MGD வரை குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது என தெரிவித்தார்.

# சேலம் மாவட்டத்தில் 100% சுகப்பிரசவங்கள் நடைபெறும் வகையில் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது–ஆட்சியர் பேச்சு

**சேலம், மார்ச் 15–**

சேலம் மாவட்டத்தில், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை சார்பில் வட்டார மருத்துவ அலுவலர்களுக்கான ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் பிருந்தாதேவி தலைமையில் மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பின் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது: தமிழ்நாடு முதலமைச்சர் அனைத்துத்தரப்பு மக்களுக்கும் தேவையான மருத்துவச் சேவைகளும் கிடைக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு பல்வேறு சிறப்பானத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள். இத்தகைய திட்டங்கள் அனைத்தும் முறையாக சென்றுசேர்வதை உறுதிசெய்யும் வகையில் தொடர் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்தவகையில், இன்றைய தினம் சேலம் மாவட்டத்தில், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை சார்பில் வட்டார மருத்துவ அலுவலர்களுக்கான மாதாந்திர ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.



சேலம் மாவட்டத்தில் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, மேட்டூர் அரசு தலைமை மருத்துவமனை, 9 வட்டார அளவிலான மருத்துவமனைகள், 2 வட்டாரமில்லா மருத்துவமனைகள், 20 சமுதாய சுகாதார நிலையங்கள், 67 கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்கள், 20 நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையங்கள், 502 துணை சுகாதார நிலையங்கள் மூலம் பொதுமக்களுக்கு அனைத்து விதமான மருத்துவ சேவைகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

இன்றையதினம் நடைபெற்ற மக்களைத்தேடி மருத்துவம். மகப்பேறு ஆய்வுக்கூட்டத்தில் வட்டாரம் வாரியாக உயர்வரிசைப்பிறப்பு. இளம் வயது கர்ப்பம், கர்ப்பிணிப்பதிவுகள், மகப்பேறு இறப்பு விகிதம், சிசு இறப்பு விகிதம், உயர் இரத்த அழுத்தம், வரும் முன் காப்போம் திட்டம், கண்ணொளிக்காப்போம் திட்டம் உள்ளிட்ட செயல்பாடுகள் குறித்து விரிவாகஆய்வுமேற்கொள்ளப்பட்டது.

குறிப்பாக அத்தியாவசிய மருந்து, மாத்திரைகள் இருப்பு குறித்தும், ஆரம்ப சுகாதார நிலையங்கள், மருத்துவமனைகளில் நாள்தோறும் வருகைதரும் புற நோயாளிகள் மற்றும் உள்நோயாளிகளின் எண்ணிக்கைகள் குறித்தும் விரிவாக ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது. அதேபோன்று டெங்கு, மலேரியா, சிக்குன்குனியா உள்ளிட்ட பல்வேறு காய்ச்சல்களுக்கான நோய்த்தடுப்பு நடவடிக்கைகள் குறித்து வட்டார வாரியாக விவாதிக்கப்பட்டது. மேலும், பாம்புக்கடி, நாய்க்கடி உள்ளிட்ட அவசரகால நோய்த்தடுப்பு மருந்துகள் போதிய அளவில் அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் இருப்பு வைத்திட அறிவுறுத்தப்பட்டது.

குறிப்பாக, கர்ப்பிணி தாய்மார்களை ஆரம்ப காலம் முதல் அவர்களுக்கு தேவையான ஊட்டச்சத்து கிடைக்கப்பெற்றுள்ளதா என்பது குறித்து சுகாதார ஆய்வாளர்கள் தொடர்ந்து கண்காணித்திட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. சேலம் மாவட்டத்தில் 100 சதவீதம் சுகப்பிரசவங்கள் நடைபெறும் வகையில் சுகாதாரத்துறையினரால் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறு தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், இணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) நந்தினி, துணை இயக்குநர்கள் சவுண்டம்மாள், யோகானந்த், சுகன்யா, ராதிகா, அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை கண்காணிப்பாளர் ராஜ்குமார், மாநகர நல அலுவலர் முரளி, வட்டார மருத்துவ அலுவலர்கள் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# மகளிருக்கு உடல் பரிசோதனை முகாம்



**விழுப்புரம், மார்ச் 15-**

விழுப்புரம் மாவட்டம் உலக மகளிர் தினத்தை முன்னிட்டு மகளிர்களுக்கான உடல் பரிசோதனை மற்றும் ரத்தப் பரிசோதனை, மார்பக புற்றுநோய் பரிசோதனை, கருப்பை வாய் புற்றுநோய் கண்டறிதல் உள்ளிட்ட சோதனைகள் அகில இந்திய மருத்துவ சங்கம் மற்றும் கீழ்பெரும்பாக்கம் அரசு மருத்துவமனை இணைந்து நடத்தும் மாபெரும் உடல் பரிசோதனை முகாம் விழுப்புரம் ரெட்டியார் மில் பாலாஜி திருமணம் மண்டபத்தில் மாநில கழக முதன்மைச் செயலாளர் டாக்டர் கந்தன் தலைமையில் மகளிர்க்கு உடல் பரிசோதனை முகாம் நடைபெற்றது. இதில் ஏராளமான மகளிர்கள் கலந்துகொண்டு உடல் பரிசோதனை செய்துகொண்டனர். இந்நிகழ்ச்சியில் தலைவர் கோவிந்தராஜ், செயலாளர் கோபிநாத் ,பொருளாளர் வெங்கடேஷ், மருத்துவர்கள் சிவகுமார், பாஷீ,ர் செல்வராஜ், ஆரோக்கியதாஸ், ஜான்சன், மக்கள் உரிமை கழகம் மகளிர் அணி மண்டல மாவட்ட தலைவிகள், பொதுமக்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# முதல்வர் மருந்தகத்தில் ஆட்சியர் ஆய்வு



**நாமக்கல், மார்ச் 15-**

நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் முதல்வர் மருந்தகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் உமா செய்தியாளர்களுடன் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பொதுமக்களிடம் மருந்துகளின் விலை மற்றும் மருந்தகத்தின் பயன் குறித்து கலந்துரையாடினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கடந்த 24.2.2025 அன்று சென்னையில் கூட்டுறவுத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மக்களுக்கு பொது மருந்துகளையும், பிற மருந்துகளையும் குறைந்த விலையில் கிடைக்க செய்யும் வகையில் "முதல்வர் மருந்தகம்" என்ற புதிய திட்டம் மூலம் முதற்கட்டமாக தமிழ்நாடு முழுவதும் 1000 மருந்தகங்களை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

அதன்படி, நாமக்கல் மாவட்டத்தில் கூட்டுறவுத்துறை மூலம் 17 முதல்வர் மருந்தகங்களும், தொழில் முனைவோர்கள் மூலம் 10 முதல்வர் மருந்தகங்களும் என மொத்தம் 27 முதல்வர் மருந்தகங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

முதல்வர் மருந்தகங்களில் பொதுமக்களுக்கு 25 சதவீதம் வரை தள்ளுபடி வழங்கப்படும். இதன்மூலம் தனியார் மருத்துவமனை, மருந்தகங்களுக்கு செல்லும் பொதுமக்கள் அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய நீரிழிவு, ரத்த அழுத்தம் போன்ற பாதிப்புகளுக்கான மருந்துகளை குறைந்த விலையில் முதல்வர் மருந்தகங்களிலிருந்து வாங்கி பயன் பெற முடியும். ஜெனிரிக் மருந்துகள், பிராண்டட் மருந்துகள், சர்ஜிக்கல், நியுட்ராசூட்டிகல்ஸ் மற்றும் இந்திய மருந்துகள் உள்ளிட்ட மருந்துகள் 1000 முதல்வர் மருந்தகங்களில் பொது மக்களுக்கு குறைந்த விலையில் மருந்துகள் கிடைக்கும் வகையில் தொடங்கப்பட்டுள்ளன. நாமக்கல் மாவட்டத்தில் உள்ள 27 மருந்தகங்களில் 13.03.2025 வரை ரூ.1.33 இலட்சம் மதிப்பில் மருந்துகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. முன்னதாக, சேந்தமங்கலத்தில் கடைகளில் நெகிழி பயன்பாடுகள் குறித்தும், காரவள்ளியில் சமுதாய கூடம் அமைபதற்கான இடம் தேர்வு செய்வது குறித்தும், கிருஷ்ணாபுரத்தில் குழந்தைகள் அங்கன்வாடி மையத்திலும் ஆய்வு மேற்கொண்டார்.

# தேசிய அளவிலான பசுமை வளாக செயல் திட்ட அறிக்கை வெளியீடு




புதுச்சேரி அக்கார்ட் ஓட்டலில் நடைபெற்ற தேசிய அளவிலான பசுமை வளாக செயல் திட்ட அறிக்கை வெளியீடு விழாவில் புதுச்சேரி துணைநிலை ஆளுநர் கைலாசநாதன் வெளியிட விஐடி பல்கலைக்கழக வேந்தர் கோ.விசுவநாதன் பெற்றுக்கொண்டார். உடன் தட்சசீலா பல்கலைக்கழக வேந்தர் ம.தனசேகரன், புதுவைத் தமிழ்ச் சங்கத் தலைவர் முனைவர் வி.முத்து, அரசு செயலர் பி.ஜவகர், அரசு செயலர் ஆர்.கேசவன், வனத்துறை முதன்மை அரசு அதிகாரி பி.அருள்ராஜன், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் டாக்டர் மு.நந்திவர்மன், செயல் இயக்குநர் டாக்டர் கோல்டா எட்வின், ச.பாஸ்கர் ஆகியோர் உள்ளனர்.

## நசியனூர், கோபிசெட்டிபாளையம் பகுதிகளில்

# மானியத்துடன் கடனுதவி பெற்று செயல்படும் தொழில் நிறுவனங்களில் ஆட்சியர் ஆய்வு



**ஈரோடு, மார்ச் 15-**

ஈரோடு மாவட்டம், நசியனூர் மற்றும் கோபிசெட்டிபாளையம் ஆகிய பகுதிகளில் மாவட்ட தொழில் மையம் சார்பில் அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம் மற்றும் தாட்கோ சார்பில் மானியத்துடன் கூடிய கடனுதவி பெற்று செயல்படும் தொழில் நிறுவனங்களில் மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜ கோபால் சுன்கரா நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு, பயனாளிகளிடம் கலந்துரையாடினார்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் மாவட்டத் தொழில் மையம் மூலம் செயல்படுத்தப்படும் நசியனூர், வீரப்பம்பாளையம் பகுதியில் "அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டத்தின்" கீழ் ஜவஹர் என்பவர் ரூ.18.81 இலட்சம் முதலீட்டில் ரூ.6.30 லட்சம் அரசு மானியத்துடன் கூடிய கடனுதவி பெற்று (மெட்டா ஹியூமன் பிட்னெஸ் சென்டர்) உடற்பயிற்சிக் கூடம் நடத்தி வருவதை நேரில் சென்று பார்வையிட்டு. பயனாளியிடம் கலந்துரையாடியபோது, பயனாளி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம், தமிழ்நாடு அரசின் மூலம் 35% முதலீட்டு மானியமும், வங்கிக்கடனை முறையாக திருப்பி செலுத்துவதால் 6% வட்டி மானியமும் வழங்கப்பட்டுள்ளது. எனவே இதன்மூலம் தான் பொருளாதார ரீதியாக மேன்மையடைந்துள்ளதாக தெரிவித்தார்.

தமிழக அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் மாவட்டத் தொழில் மையம் மூலம் செயல்படுத்தப்படும் "குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் கொள்கை 2021"ன் கீழ் "ஒரு முறை பயன்படுத்தும் மற்றும் தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக்குகளுக்கான மாற்றுப் பொருட்கள்" உற்பத்தி செய்யும் தொழில் நிறுவனங்களுக்கான சிறப்பு முதலீட்டு மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில், நசியனூர், வில்லரசம்பட்டி பகுதியில் இயங்கும் ஈகோ பாக்ஸ் எண்டர்ப்ரைஸ்" நிறுவனத்தில் ரூ.68.00 இலட்சம் கடனுதவியுடன் தொடங்கி அரசு மானியம் ரூ. 18.32 லட்சம் பெற்று "மறுசுழற்சி செய்யும் பைகள்" தயாரிக்கும் தொழில் மேற்கொள்ளப்பட்டு வருவதை மாவட்ட ஆட்சித்தலைவர் நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார். மேலும், பயனாளியிடம் மூலப்பொருள்கள் எளிதாக கிடைக்கப்பெறுகின்றதா, பெற்ற கடனை முறையாக செலுத்துகிறீர்களா, தயாரிப்பு பொருட்கள் எங்கெங்கே அனுப்பப்படுகிறது என கேட்டறிந்தார்.

அதனைத் தொடர்ந்து, கோபிசெட்டிபாளையம் நகராட்சி, ராம்நகர் 2வது வீதியில் தாட்கோ சார்பில் சுதர்சன் என்பவர் ரூ.5,45,066 முதலீட்டில் ரூ.1,90,773 மானியம் மற்றும் ரூ.3,27,040 கடனுதவி பெற்று இயன்முறை மருத்துவ மையம் அமைத்து செயல்படுத்தி வருவதையும், மேலும் அய்யம்பாளையம் பகுதியில் தயாள் ஸ்ரீ என்பவர் ரூ.9,88,176 முதலீட்டில் ரூ.3,45,862 மானியம் மற்றும் ரூ.5,92,905 கடனுதவி பெற்று பேக்கரி நடத்தி வருவதையும் நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு, பயனாளிகளிடம் கலந்துரையாடினார்.

இந்த ஆய்வுகளின்போது, பொது மேலாளர் (மாவட்ட தொழில் மையம்) திருமுருகன், மாவட்ட மேலாளர் (தாட்கோ) அர்ஜுன் உட்பட தொடர்புடைய துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

# திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் தொடக்க நிலை இடையீட்டுச் சேவைகள் மையத்தில் ஆட்சியர் நேரில் ஆய்வு

**நெல்லை, மார்ச் 15-**

திருநெல்வேலி மாவட்டம் திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அனைத்து குழந்தைகளுக்கும் ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் காதுகேட்கும்திறன், பார்வைதிறன் போன்ற திறன்களை முன்கூட்டியே கண்டறிந்து தீர்வு காணும் வகையில் அமைக்கப்பட்டுள்ள மாவட்ட தொடக்க நிலை இடையீட்டுச் சேவைகள் மையத்தினை மாவட்ட ஆட்சித் தலைவர் சுகுமார் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி. மருத்துவமனையில் குழந்தைகள் மருத்துவ பிரிவுடன் இணைந்து மாவட்ட தொடக்க நிலை இடையீட்டுச் சேவைகள் மையம் செயல்பட்டு வருகின்றது. இம்மையத்தில் பிறந்த குழந்தை முதல் 18 வயது வரை உள்ள அனைத்து குழந்தைகளுக்கும் பிறவி குறைபாடுகளான கண்புரை,. காதுகேளாமை, அன்னபிளவு, இதய நோய், முதுகு தண்டுவட வீக்கம், முன் கால் எலும்பு வளைவு மற்றும் பிறவி குடல் இரக்கம் போன்ற நோய்கள் மற்றும் ஊட்டச்சத்து குறைபாடுகள் கண்டறியபட்டு உடனடியாக சிகிச்சைகள் வழங்கப் பட்டு வருகின்றது. மேலும் இம்மையத்தில் மனநலம் சம்பந்தமான ஆட்டிஸம், கற்றல் குறைபாடுகள் மற்றும் தசை குறைபாடுகள் கண்டறியப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பெரிய அளவில் இருதய குறைபாடு உள்ள குழந்தைகளுக்கு அறுவை சிகிச்சையும், சிறிய குறைபாடுகள்ள குழந்தைகளுக்கு நவீன முறையில் இருதய குறைபாட்டினை போக்கும் கருவிகள் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீடு திட்டத்தின் கீழ் பொருத்தப்பட்டு வருகிறது.

இரண்டு வருடங்களில் தொடக்க நிலை இடையீட்டுச் சேவைகள் மையம் மூலமாக 151 இருதய குறைபாடுள்ள குழந்தைகளுக்கு இருதய சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது. இதில் 31 குழந்தைகளுக்கு இருதய அறுவை சிகிச்சை இன்றி நவீன முறையில் இருதய குறைபாட்டை நீக்கும் கருவி பொருத்தப்பட்டுள்ளது. தமிழகத்தில் இருதய குறைபாடுள்ள குழந்தைகளுக்கு அதிகமான நவீன சிகிச்சை மேற்கொண்ட மருத்துவமனை திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி, மருத்துவனையாகும்.

இருதவியல் பிரிவு மருத்துவர்களால் 5 குழந்தைகளுக்கு அறுவை சிகிச்சையின்றி நவீன உபகரணங்களுடன் இருதய குறைபாட்டை நீக்கும் கருவி பொருத்தப்பட்டு, சிகிச்சை பெற்று வரும் அக்குழந்தைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் நலம் விசாரித் தார்கள். இந்த ஆய்வின்போது, மருத்துவக்கல்லூரி முதல்வர் ரேவதி பாலன், கண்காணிப்பாளர் பாலசுப்பிரமணியம், இருதவியல் துறை தலைவர் ரவி எட்வின், குழந்தைகள் நலத்துறை தலைவர் கிருஷ்ண மூர்த்தி, DEIC குழந்தைகள் மருத்துவர் டாக்டர் சுப்பையா ஸ்ரீராம், சுந்தரராஜன் உட்பட அரசு அலுவலர்கள் மற்றும் செவிலியர்கள் பலர் கலந்துகொண்டார்கள்.



OWNER Dr.K.SAKTHIVEL. M.B.A., Ph.D., M.A., M.phil., (JMC) PRINTER I. MANOHARAN, PUBLISHER Dr.K.SAKTHIVEL PUBLISHED FROM No.159, First Floor, Mission St, Puducherry - 605 001 AND PRINTED FROM SENTHIL ANDAVAR OFFSET PRINTERS, No.5, THENGAITITTU ROAD, MUDALIYARPET, PUDUCHERRY - 605 005 . EDITOR Dr.K. SAKTHIVEL E-mail:maalaiexpresspdy@gmail.com, Website: www.maalaiexpress.com Ph : 0413-2226989, 9842335007



# பட்ஜெட்டில் வேளாண் துறைக்கு ரூ.45,661 கோடி நிதி ஒதுக்கீடு

# 41 நாட்டினர் அமெரிக்காவுக்கு பயணிக்க தடை?–டிரம்ப்



# ஹோலி கொண்டாட்டத்தில் சோகம் 4 சிறுவர் உள்பட 7 பேர் நீரில் மூழ்கி பலி


# மாலை எக்ஸ்பிரஸ்



Email: maalaiexpresspdy@gmail.com

Website: www.maalaiexpress.com



• 15-3-2025 சனிக்கிழமை • பக்கம் 8 • ரூ.600 காசுகள்